# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## சிறப்புப் பகுதி

தொகுத்தோர்:

**ஸ்ரீமான். T. S. அருணாசலம் பிள்ளை, B.A. L.T.,**
தலைமை ஆசிரியர் போர்டு ஹைஸ்கூல்,
நாச்சியார் கோயில் தஞ்சை ஜில்லா

,, **N. நஞ்சப்பா, M.A. B.O.L. L.T.,**
தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல்,
பாபிரெட்டிபட்டி சேலம் ஜில்லா.

,, **வித்வான் G. சந்திரமௌளீசுவரன்,**
தமிழாசிரியர், லண்டன் மிஷின் ஹைஸ்கூல், சேலம்.

**விந்திய வெளியீடுகள்**
**1-1, பெரியண்ணை மேஸ்திரி தெரு, சென்னை-1.**

பதிப்புரிமை] 1952 [விலை அணா 12.

First Edition November, 1952,

T. V. C Press Madras

# முன்னுரை

'**எங்கள் தமிழ்க் கோவை**' என்னும் பெயரோடு வெளி வரும் இக் கோவை நூல்கள் உயர் நிலைப் பள்ளிகளில் நான்கு—ஐந் தாம் படிவங்களில் பயிலும் மாணவர்கட்குப் பாட நூல்களாக அமை வதற்குரியனவாகும். மண்டல மொழி முதன்மையாக்கப்பட்ட பின்னர், அந்நிலைக்கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாட வியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கவும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப் புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக் கெனப் பாட வியலில் குறிக்கப்பட்டுள்ள அளவினும் சிறிது மிகுதி யாகவே செய்யுட்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள் ளன. ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும், மாணவர்களின் தகு திக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துதற்கு இடமிருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள் ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும், உரை நடைப் பாடங்களுக்குப் பயிற்சி வினாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணை கொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சி யும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவ தாக வெளிவரும் இக் 'கோவை' நூல் வரிசையை ஆசிரியர்களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான் ம. வி. இராகவன், வித்து வான். எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகம் கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட்களையும் கட்டுரைகளையும் இக் 'கோவை' வரிசையில் கோத் துக் கொள்ள இசைவுதந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து : | | |
| | 1. புறநானூறு | .... | 1 |
| II. | அறவுரை : | | |
| | 1. திருக்குறள் | .... | 2 |
| | 2. திருமந்திரம் | .... | 3 |
| | 3. பழமொழி நானூறு | .... | 5 |
| III. | காதை : | | |
| | 1. திருவிளையாடற் புராணம் | .... | 6 |
| | 2. பாகவத புராணம் | .... | 8 |
| | 3. மணிமேகலை | .... | 15 |
| | 4. மனோன்மணீயம் | .... | 18 |
| IV. | சிறு நூல்கள் : | | |
| | 1. மீனாட்சியம்மை குறம் | .... | 22 |
| | 2. முக்கூடற்பள்ளு | .... | 22 |
| | 3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் | | 23 |
| | 4. அழகர் கலம்பகம் | .... | 24 |
| | 5. குற்றாலக் குறவஞ்சி | .... | 24 |
| V. | வருணனை : | .... | 26 |
| | 1. கந்துக வரி | .... | 25 |
| VI. | தனிப் பாடல்கள் : | ... | 26 |

# உரை நடை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **இலக்கியமும் வாழ்க்கை முறையும்**<br>திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள் M. A. | .... | 28 |
| 2. | **அவன் யார் ?**<br>மகாமகோபாத்தியாய, டாக்டர்,<br>உ. வே. சாமிநாத ஐயர். | .... | 37 |
| 3. | **ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**<br>டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A.,Ph. D. | .... | 41 |
| 4. | **அணு வெடிக்குண்டு**<br>திரு. அ. சி. சுப்பிரமணிய பிள்ளை, பி.ஏ, எல் டி, | ... | 46 |
| 5. | **சங்கப் புலவர் நக்கீரனார்**<br>வித்துவான் திரு. ம. வி. இராகவன் | ... | 51 |
| 6. | **சிங்கப்பூர்**<br>திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார்<br>அவர்கள், B.A. | ... | 57 |

# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## சிறப்புப் பகுதி

---

# I. கடவுள் வாழ்த்து

### புறநானூறு

கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப,
கறைமிட றணியலு மணிந்தன்(று), அக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு ஒருதிற னாகின்(று), அவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின்(று), அப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே.
எல்லா உயிர்க்கும் ஏம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

— பாரதம் பாடிய பெருந்தேவனார்.

### குறிப்புரை

இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களால் ஆகியதால் புறநானூறு என்று பெயர் பெற்றது. இது கடைச்சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத்தொகை நூல்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

இந்நூலிலுள்ள பாட்டுக்களைப் பாடிய புலவர் பலர். அவர்கள் ஒரு காலத்திருந்தவர் அல்லர்; ஒரு நாட்டினரும் அல்லர்; ஒரு குலத்தவரும் அல்லர். தமிழ் மக்களது அரசியல்முறை, போர்முறை, கொடைத்திறம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நன்கு அறிதற்கு இந்நூல் பெரிதும் துணை செய்கிறது.

### அருஞ் சொற்கள் :

கண்ணி—மாலை
காமர்—அழகிய
ஊர்தி—வாகனம்.
கரகம்—கமண்டலம்.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### வாய்மை

வாய்மை எனப்படுவது(து) யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 4

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 10

—திருவள்ளுவர்.

### குறிப்புரை

திருக்குறள்—குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவுகளை உடையது. இதனை முப்பால் என்றும் கூறுவர்.

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் வள்ளுவர் குடியைச் சேர்ந்தவர்; நல்லொழுக்கமுடையவர்; அரசருடன் நன்கு பழகியவர். புல்கலைப் பயிற்சியுடையவர்.

இவரை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் பாராட்டினர்.

வாய்மையாவது மெய்யினது தன்மை. வாய்மை, மெய்ம்மை, உண்மை என்னும் மூன்றனையும் நாம் ஒரே பொருளில் எடுத்தாளுகின்றோம். அவை முறையே வாயினது தன்மை, மெய்யினது தன்மை, உள்ளத்தினது தன்மை என்று பொருள் படும். வாயாற் சொல்வன தூயனவாயிருத்தல் வேண்டும், மெய்யினுல் செய்வன தூயனவாயிருத்தல் வேண்டும், உள்ளத்தினுல் கருதுவன தூயனவாயிருத்தல் வேண்டும்.

1. வாய்மை—மெய்ம்மை, எனப்படுவது-என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. யாதொன்றும்-சிறிதும், இலாத-பயவாத சொற்கள்.

2. புரை தீர்ந்த—பிறர்க்குக் குற்றம் தீர்ந்த, பொய்ம்மை-பொய்ம்மைச் சொற்கள், குற்றம் தீர்ந்த நன்மை-அறம்.

3. தன்னெஞ்சு அறிவது – தனது நெஞ்சு அறிவதொன்றினை, பொய்யற்க-பொய்யாதொழிக, தன்னைச் சுடும்- அதன் பயனாய்த் துன்பத்தை எய்துவிக்கும்,

4. உள்ளத்தால்-ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்ப: வேற்றுமை மயக்கம். உலகத்தார்—உயர்ந்தோர்.

5. மனத்தொடு—ஒருவன் தன் மனத்தொடு பொருந்த, தவத்தொடு தானம் செய்வாரின்—தவமும் தானமும் ஒருங்கு செய்வாரைக் காட்டிலும்.

6. பொய்யாமை—பொய் கூருமை, எய்யாமை – மறுமைக்கு மெய் வருந்தாமல், புகழ்—ஆகுபெயர்.

7. பொய்யாமைபொய்யாமை ஆற்றின்-பொய்யாமையையே பொய்யாமல் செய்ய வல்லனாயின். முதல் அடுக்கு இடைவிடாமைப் பொருளிலும், இரண்டாவது அடுக்கு துணிவுப் பொருளிலும் வந்தன.

8. புறம்—உடம்பு, அமையும் – உண்டாம், அகம்தூய்மை – மனத்தூய்மை, காணப்படும்-உண்டாம், மனந்தூய்தாதல் மெய்யுணர்தலாகும்.

9. எல்லா விளக்கும்—புறத்து இருளைப் போக்கும் உலகத்தார் விளக்குகள், சான்றோர்-துறவான் அமைந்தோர், வாய்மை மனத்திருள் போக்கும் விளக்காகும்.

10. மெய்யா – மெய்ந் நூல்களாக, எனைத்தொன்றும் – யாதொரு தன்மையாலும், வாய்மையின் நல்ல-வாய்மையான் மிக்கனவாக, பிற-பிற அறங்கள்.

## 2. திருமந்திரம்

யாவர்க்கும் ஆம்இறை வற்குஒரு பச்சிலை ;
யாவர்க்கும் ஆம்பசு வுக்குஒரு வாய்உறை ;
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதுஒரு கைப்பிடி ;
யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்உரை தானே. 1

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார் ;
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிகிலார் ;
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவம்ஆய் அமர்ந்துஇருந் தாரே. 2

படமாடக் கோவில் பகவற்குஒன்று ஈயின்
நடமாடக் கோவில் நம்பர்க்குஅங்கு ஆகா ;
நடமாடக் கோவில் நம்பர்க்குஒன்று ஈயின்
படமாடக் கோவில் பகவற்குஅது ஆமே. 3

கண்காணி ஆகவே கைஅகத் தேஎழும் ;
கண்காணி ஆகக் கருத்துள் இருந்திடும் ;
கண்காணி ஆகக் கலந்துவழி செய்யும் ;
கண்காணி ஆகிய காதலன் தானே. 4

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும் ;
நன்றே நினைமின்; நமன்இல்லை நாளுமே;
சென்றே புகும்கதி இல்லை;நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே. 5

—திருமூல நாயனார்.

### குறிப்புரை

இதன் ஆசிரியர் திருமூலநாயனார். இவர் திருவாவடுதுறையில் ஓர் அரசமரத்தின்கீழ் மூவாயிரம் ஆண்டு சிவயோகம் இருந்து, ஓர் ஆண்டிற்கு ஓர் அருட்பாவாகத் திருமந்திரம் மூவாயிரத்தையும் திருவாய் மலர்ந்தருளினர் என்பர்.

### அருஞ்சொற் பொருள்

1. உறை-உணவு, ஆம்-முடியும்.
2. அன்பே சிவம்.
3. படமாடக் கோவில் - கூடாரம்போல் கட்டப்பட்ட கோவில், நடமாடக் கோவில்-நடமாடும் உயிர்களாகிய மாடக்கோவில். உயிருள்ள உடலங்களுக்கு உணவு கொடுப்பதே சிறந்த பூசையாம்.
4. கண்காணி - கண்ணால் எல்லாம் காண்பவன். ஒருவன் செய்யும் கூடா ஒழுக்கங்களை எல்லாம் கண்காணிப்பவன் இறைவன்; அவனை மறைத்து ஒன்றும் செய்யமுடியாது.
5. நமன்—எமன், உய்ம்மின்-ஈடேறுங்கள்.

## 3. பழமொழி நானூறு

### அறிவுடைமை

அறிவினால் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும்—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 1

### முயற்சி

தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்
சென்னீர் அருவி மலைநாட! பாய்பவோ
வெந்நீரும் ஆடாதார் தீ? 2

### பொருள்

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல். 3

### அரசியல்

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தனாகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 4

### ஈகை

இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறும் கிணறு. 5

—முன்றுறையரையனார்.

### குறிப்புரை :

ஒவ்வொரு பழமொழியையும் இறுதியில் பெற்ற 400 வெண்பாக்களை உடைய நூல் "பழமொழி" என்று வழங்குகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார்.

1. 'ஆடையற்றவன் அரை மனிதன்' ஆகையால் நகைகளைவிட ஆடையே மேலானது. அவ்வாறே செல்வம், குலம் முதலியவற்றைவிட அறிவே மேலானது-மாட்சி-பெருமை, மாண்டது-பெருமை பெறுதல், எவனும்-எப்படிமுடியும், சாந்தம் சந்தனம்.

2. செல்நீர்-பரந்து செல்லும் அருவிநீர்.

3. நல்கூர்ந்து - வறுமையடைந்து, வட்குபவோ – பிறர்க்குத் தாழ்வரோ ? வலித்து - நரம்புவலித்து, திரங்கி-சுருங்கி.

4. நடக்கை-ஒழுக்கம், ஒள்ளியன்-உயர்ந்தவன்.

5. தூங்கு-செறிந்த, சேர்ப்ப-செய்தல் நிலத்தலைவனே, கரப்பவர்-கொடாமல் ஒளிப்பவர்.

# III காதை

## 1. திருவிளையாடற் புராணம்

### குண்டோதரனுக்கு அன்னம் அளித்தது

### மீனாட்சியம்மையார் குண்டோதரனுக்கு அன்னமிடப் பணியாளர்க்குப் பணித்தல்

"குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடுமின்; அப்புறஞ் சோறுமால்" எனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினுள்; குறியனும் உடனே
நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான். 1

#### குண்டோதரன் உண்ணத் தொடங்கல்

படைக்கண் ஏவலர் இறைமகள் பணியினல் பசிநோய்
தொடுத்த வன்தனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார்;
அடுத்தி ருந்ததே கணடனர் ; அன்னமா மலையை
எடுத்த யின்றதும், அடிசிலங் கிருந்ததுங் காணுர். 2

முரவை போகிய முரிவில்வான் மூரல், பால் வறையல்,
கருனை, தீம்பய றடுதுவை, பல்வகைக் கறிகள்,
விரவு தேம்படு பால்தயிர், இழுதுதேன் வெள்ளம்,
வரைவி லாதன மிடவொடு வாரிவாய் மடுத்தான். 3

பல்ப ழக்குவை, வேற்றுருப் பண்ணியங், கன்னல்,
மெல்சு வைத்தண்டு, தெங்கிவை யன்றியும், வேவா
வல்சி, காய்களின் வருக்கமும் நுகர்ந்து மாறுமல்
எல்லை தீர்நவ பண்டமும் எடுத்துவாய் மடுத்தான். 4

### உண்டும் பசியாருமை

பாரித் துள்ளவிப் பண்டமும் பருஉங்குறுங் கையால்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவும், துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் கொளுத்த. 5

### குண்டோதரன் முறையீடு

"நட்ட மாடிய சுந்தர! நங்கையெம் பிராட்டி
அட்ட போனகப் பனிவரை அனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் கடும்பசி தணியா
திட்டு ணுதவர் வயிறுபோல் காந்துவ" தென்ருன். 6

### அன்னக்குழி அழைத்தல்

கவன மால்விடை யாளிபின் கடிகமழ் தென்றல்
பவன மாமலை யாட்டியைப் பார்த்துளே நகைத்துத்
தவன மாப்பசி யுடையவன் தன்பொருட் டன்ன
புவன மாதினை நினைந்தனர் ; நினைக்குமுன் போந்தாள். 7

### குண்டோதரன் பசி ஆறுதல்

அத்த யிர்ப்பதக் கிடங்கரில் அலைகடல் கலக்கும்
மத்தெ னக்கரம் புதைத்தெடுத் தெடுத்துவாய் மடுத்துத்
துய்த்தி டப்பசி விடுத்தது, சுகுதிநா யகன்தாள்
பத்தி வைத்துவீ டுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல். 8

### தண்ணீரைத் தேடுதல்

வாங்கி வாங்கிவாய் மடுத்தலும், உடம்பெலாம் வயிருய்
வீங்கி னன்; தரை கிழிந்திடப் பொருப்பென வீழ்ந்தான் ;
நீங்கு நீடுயிர்ப் பிலனுடல் புரண்டனன் ; நீர்வேட்
டாங்குநீர்நிலை தேடுவா னுயினன் எழுந்தான். 9

### நீரைப்பருகிக் குண்டோதரன் மகிழ்தல்

தீர்த்தன் சடைநின் றிழிதீர்த்த மருந்தி, வாக்குக்
கூர்த்தின் புகொண்டு, குழகன்திரு முன்னர் எய்திப்
பார்த்தன் பணிந்த பதமுன்பணிந் தாடிப் பாடி,
ஆர்த்தன் புருவாய்த் துதித்தானள வாத கீதம். 10

—பரஞ்சோதி முனிவர்.

**குறிப்புரை**

இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் வேதாரண்யம் என்னும் திரு மறைக்காட்டில் அபிடேகத்தர் மரபில் ஆதிசைவ சமயத்தில் பிறந்தார்.

**அருஞ் சொற்கள்**

1. குறள் - (குண்டோதரன்.) நாயகி - மீனாட்சியம்மையார். 2. படை-வேற்படை, இறை மகள் - அரசி, (மீனாட்சியம்மையார்). பணி-கட்டளை, சொன்றி-சோறு. அடிசில்-உணவு. 3. முரவை-அரிசியில் உள்ள வரி. வான்மூரல்-வெண்மையான சோறு, கருனை-பொரிக்கறி, துவை-துவையல், விரவு-கலந்த. தேம்படு-இனிமை நிறைந்த, இழுது-நெய், வரைவு-அளவு. 4. குவை-குவியல், பண்ணியம்-பட்சணம், கன்னல்-கரும்பு, வல்சி-அரிசி, நவ-புதிய. 5. பரு-பருத்த, துடுவை-நெய் அகப்பை. ஆகுதி-ஓமத்தீயில் நெய்விடுதல். 6. நட்டம்-நடனம், அட்ட - சமைத்த, போனகம் - உணவு, பனிவரை-இமயமலை. 7. கவனமால் விடையாளி-வேகமாகச் செல்லும் பெரிய இடபத்தில் வரும் சிவபெருமான், தவனர்-தாகம், 8. துய்த்திட-புசிக்க. சுருதி நாயகன்-வேத முதல்வன் (சிவபெருமான்). 9. பொருப்பு-மலை, உயிர்ப்பு-மூச்சு, வேட்டு-விரும்பி. 10. பார்த்தன்-அருச்சுனன்.

## 2. பாகவத புராணம்

### குசேலர் வரலாறு

பாயும் வல்லிருள் பருகுமொண்
கதிர் மணிச் செஞ்சூட்(டு)
ஆயி ரந்தலை அலர்த்துபாம்
பணைத்துயி லகற்றி,
காயும் வெஞ்சினக் கட்செவித்
தலையில்நின் றுடும்
மாய னன்பினன், குசேலன்என்
றுளனொரு மறையோன்.

### சுசீலை வறுமை நிலையை வெளியிட எண்ணுதல்

எனைத்தொன் றுயினும் எதிர்ந்தது
மிசைந்துவண் டிரைக்கும்
புனத்து ழாய்முகில் பொன்னடி
கருதுமம் மறையோன்
மனைக்கி ழத்திவெம் பசியினல்
வாடிய முகத்தாள்,
பனித்த கண்ணினள், பவளவாய்
திறந்தனள் பகர்வாள். 2

### 'கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருக' என்றல்

'பொன்பி றங்கிய பூண்திகழ்
திருமகள் கொழுநற்(கு)
அன்ப னாகியும் அகன்றிலை
வறுமை ; மற்றென்னோ ?
மின்பி றங்கிய விழுமணி
மார்பினர்க் கண்டு
மன்பெ ரும்பொருள் வாரினை
வரு'கென வகுத்தாள். 3

### கண்ணனுக்காகக் கையுறை தந்தனுப்பல்

வடித்த நான்மறை அந்தணன்,
'மாயனைக் காணின்
கொடுப்ப தென்?' என, குறுநுதல்
அறவர்பாற் கொடுவந்(து)
இடித்த பாசவல் இரந்தவெண்
துகில்பொதிந் தீந்து
'நடத்தி' என்னலும், நசையிலன்
மென்மெல நடந்தான். 4

### குசேலன் துவாரகை அடைதல்

தெரியு நான்மறை இன்னமும்
தெரிவுறக் காண்டற்(கு)
அரிய னாகிய அரக்கிதழ்
முளரியஞ் செங்கண்
கரிய வன்தனைக் காணுறக்
கடுகுபே ரன்பு
விரிய ஏகினன்; விழுப்பெருங்
கோயின்மே யினனால். 5

### கண்ணனைக் காணுதல்

மன்னர் மன்னவர் மணிமுடித்
திரள் பொரு துக்க
பொன்னி வந்தொளிர் பொற்கடை
முன்னிறந் தேகி,

கன்னி யந்துழாய்க் கருமுகி
லொருகனித் துவர்வாய்
அன்ன மென்னடை அரிவையோ
டிருந்துழி அடைந்தான். 6

### கண்ணன் குசேலனை வரவேற்றல்

உருகு காதலன் பைப்பைய
வொல்கினன் வருதல்
முருகு வெம்புசெம் முளரியஞ்
செங்கணன் நோக்கி,
எரிபொன் சேக்கைநின் றெழுந்தெதிர்
சென்'றிவண் வருக !
வருக!' என்றுபொன் மார்புறத்
தழீ இயினன் மகிழ்ந்தான். 7

### கண்ணன் குசேலனை உபசரித்தல்

களித்த செங்கயல் கருங்கண்மா
மாதுவெண் கவரி
வளைத்த ளிர்க்கையால் இரட்டமா
மணியணை இருத்தி,
'இளைத்தி சால!' என் றிளநிலா
ஒழுகு நூல் மார்பின்
அளிக்கு லஞ்செறி செய்யதா
ரணிந்துபா களித்தான். 8

### கண்ணன் பழமை பாராட்டல்

பயிற்று நான்மறைக் குரவன் அம்
மனையவள் பணியால்,
வெயிற்கு வெம்பிய கானிடை
விராய்தரற் கேகிப்
புயற்க சைந்தொரு பொதும்பரி
னிரவுநா மிருந்த(து)
அயர்த்தி போலும்! என் றளவளாய்
உசாவின னன்றே. 9

### கண்ணன் கையுறை ஏற்றல்

முளைத்த வெண்ணிலா முறுவல்வாள்
முகத்தின ளாகி
'அளிப்ப மற்றெனக் கென்கொடு
வந்தனை? அன்ப!
ஒளிப்ப தென்னை நீ? உதவு'கென்
றுள்ளரக் கூட்டும்
தளிர்க்கை யால்துகில் வாங்கினன்
தனிமறை முதலி. 10

### கண்ணன் அவல் உண்ணல்

'பொருள்வி ழைந்திவன் போற்றலன்
நமையொரு பொழுதும்;
திருவி ழைந்திவன் திருமனைக்
கிழத்திசெல் கென்ன,
வரவு வந்தனன்; மற்றிவற்
களித்து'மென் றள்ளி
விரைக மழ்ந்தபூந் துளவினான்
பாசவல் மிசைந்தான். 11

### கண்ணன் அவல் உண்டலை ருக்மணி தடுத்தல்

'ஊர்ந்த காதலின் ஒரு முறை
அருந்திய திறத்தால்
ஏந்த லிந்திரன் எனக்கருஞ்
செல்வமெய் தினனால்;
மாந்தல் மற்றினி' என்றுசெம்
மலர்க்கரம் பிடித்தாள்
பூந்து ழாய்வரை மார்பக
மகன்றிலாப் பூவை. 12

### குசேலன் கண்ணனிடம் விடைபெறுதல்

தடநெ கிழ்ந்தசெந் தாமரை
யவள்குறிப் பறிந்து,
விடுசு டர்ப்பனி வெண்ணகை
முகிழ்த்தருள் சுரந்து,

மடைதி றந்துசெங் கண்ணிஞன்,
மறையவன் தனக்கு
விடைபு ரிந்தனன்; வீறுசால்
வேதியன் எழுந்தான். 13

## குசேலன் தன் ஊரடைதல்

'அம்ம வுய்ந்தனம் உய்ந்தனம்!
அரும்பொரு ளெய்தின்
மம்மர் கூர்தர மறக்குவன்
நமை'யென மதித்தே,
மும்மை சாலுல(கு) அளித்தருள்
முளரியஞ் செங்கண்
செம்மல் நல்கலன் 'செல்வ'மென்
றுவந்தனன் சென்ருன். 14

## குசேலன், செல்வச் சிறப்பெய்தியிருக்குந் தன் வீட்டினை அடைதல்

களித்த வண்டினம் கஞலவாய்
விரிந்துதண் தேறல்
துளித்த நாண்மலர்ச் சோலையும்,
சுடர்மணித் தொகுதி
தெளித்தெ னத்திகழ் தீம்புனல்
வாவியுஞ் செறிந்து,
பளிக்கு மண்டபம் பல்குதன்
மனையகம் படர்ந்தான். 15

## குசேலன், தன் மனைவியின் மாறுதலைக் கண்டு மயங்கல்

தெளிநி லாக்கதிர் சிந்திய
வெள்ளிவெண் மாடம்
முளையி ளம்பிறை தவழவிண்
முகடுகீண் டோங்கி
அளகை காவலன் அருநிதி
அறைதிறந் தென்ன
வளம லிந்தஅம் மனையகம்
நோக்கினன் மயர்ந்தான். 16

### குசேலன், சுசீலை ஆடை அணி திகழவருவது கண்டு அயிர்த்தல்

விலகி வில்லுமிழ் மீன்குழாத்
தொள்ளரி விரிக்கும்
கலைநி றைந்தவெண் மதியென,
கவின்வழிந் தொழுகு
திலக வாள்நுதல் சிற்றிடைத்
தெரிவையர் செறிய,
இலகு பூணணிந்(து) இல்லவள்
வருதல்கண் டயிர்த்தான். 17

### குசேலன்; கண்ணன் கருணையை எண்ணி வியத்தல்

பதியை நோக்கினன்; பதிதொறும்
பதிதொறுங் கிடந்த
நிதியை நோக்கினன்; நேரிழை
மடப்பிணை மருட்டும்
புதிய நோக்கொடு போதரு
மனையவள் வதன
மதியை நோக்கினன்; 'மால்செயல்
இது!'வென வலித்தான்.

—**செவ்வைச் சூடுவார்.**

### குறிப்புரை :

பழைய வரலாறுகளை உலகத்தின் தோற்றம் முதலிய பல செய்திகளுடன் விவரித்துக் கூறும் நூல் 'புராணம்' எனப்படும். இவ்வகைப் புராணங்களுள், பாகவத புராணம் ஒன்று. 'ஸ்ரீமத்' என்பது 'பொலிவை யுடையது' எனப் பொருள்படும். பாகவதம் என்னும் பெயர் பகவானைக் குறித்துச் சொல்வது என்ற பொருளது. இதனை வடமொழியில் இயற்றியவர்—வியாசமுனிவர். இதனைச் சொல்லி யருளியவர் சுகமுனிவர். கேட்டவர் பரீட்சித்து மன்னர். இந்தத் தமிழ்ப் பாகவத புராணம் அந்த வடமொழி நூலின் வழிநூலாகச் செய்யப்பட்டது.

பாகவதத்தைத் தமிழில் ஆக்கியவர்—**செவ்வைச் சூடுவார்** என்பவர். இவர் பிறந்து வாழ்ந்த இடம், **வேம்பத்தூர்.** இது பாண்டிய நாட்டிலுள்ளது. செவ்வைச் சூடுவார் என்பது செவ்வையாகச் சூடும் பாமாலையை யுடையவர் என்ற காரணம்பற்றி இவர் பெற்ற சிறப்புப்பெயர். இவரது இயற்பெயர் **மாதவ பண்டிதர்** என்பது. இவர் அந்தண குலத்தினர். **காலம்:** முந்நூறு வருடங்கட்கு முன்.

1. பருகும்—குடிக்கும் (போக்கும்). சூடு—உச்சிக்கொண்டை, அணை—படுக்கை, துயில்—தூக்கம், கட்செவி—பாம்பு, மாயன்—கண்ணன்,

2. மிசைந்து-உண்டு, இரைக்கும்-ஒலிக்கின்ற, துழாய்-துளசி. முகில்-மேகம் போலும் கருநிறமுடைய கண்ணன், மறையோன்-குசேலன், மனைக்கிழத்தி-மனைவி, பனித்த-நீர் ததும்பிய, பவளவாய்-பவளம்போன்ற வாய் ; உவமைத் தொகை.

3. பிறங்கிய-விளங்கிய, பூண்-ஆபரணம், திருமகள் கொழுநன்-இலக்குமியின் கணவனை திருமால் (கண்ணன்). மின்-மின்னலைப்போல், விழுமணி-சிறந்த இரத்தினம், மன்-நிலைபெற்ற, வாரினை வருக-வாரிக்கொண்டு வருவாய், வகுத்தாள்-சொன்னாள்.

4. வடித்த – ஆராய்ந்தெடுத்த. நான்மறை – நான்கு வேதங்கள்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என் – என்ன, குறுநுதல் - சிறிய நெற்றியையுடைய சுசீலை; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அறவர்-குசேலர், பாசவல்–செவ்விய அவல், துகில்-துணி, பொதிந்து–மூடிக்கட்டி, நடத்தி-செல்லுவாய், நசை–விருப்பம்,

5. காண்டற்கு – பார்ப்பதற்கு, அரக்கு இதழ்-அரக்கைப் போன்ற உதடு; உவமைத் தொகை, கோயில் மேயினன் - அரண்மனையை யடைந்தான், கோயில், கோவில் என்பதன் இலக்கணப் போலி,

6. நிவந்து–உயர்ந்து, பொன் கடை-அழகிய தலைவாசல், இறந்து–கடந்து, கருமுகில்-கண்ணன்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அரிவை-பெண்(கள்).

7. காதலன் – அன்புடையவன்; குசேலன், பைப்பைய - மெல்ல மெல்ல; 'பையப்பைய' என்பதன் விகாரம், ஒல்கினன்-தளர்ந்தவனாய்; முற்றெச்சம், முருகு-வாசனை, செங்க(ண்)ணன் கண்ணன். சேக்கை–படுக்கை, இவண்-இவ்விடம், தழீஇயினன்-தழுவினான்.

8. மாமாது - உருக்குமணி, கவரி–சாமரை, தளிர்க்கை–தளிர்போன்ற கை; உவமைத் தொகை. இரட்ட–வீச. இளைத்தி-மெலிந்திருக்கிறாய்; முன்னிலை யொருமை வினைமுற்று, அளி–வண்டு, செய்ய–சிவந்த, தார்–மாலை.

9. குரவன்–ஆசிரியன்; சாந்தீபினி முனிவர், புயல்–மழை, அசைந்து–வருந்தி; பொதும்பர்-சோலை, அயர்த்தி-மறந்தாய். அளவளாய்-மனங்கலந்து, உசாவினன்-கேட்டான்.

10. முறுவல்–பல், என்–என்ன, கொடுவந்தனை–கொண்டுவந்தாய். அரக்கு-செந்நிறம், முதலி-முதன்மை யானவன்.

11. விழைந்து – விரும்பி, போற்றலன் – போற்றினானில்லை, திரு-செல்வம் செல்க + என; அகரம் தொகுத்தல் விகாரம். அளித்தும்-கொடுப்போம்; தனித் தன்மைப் பன்மை வினைமுற்று, விரை-வாசனை, துளவினோன்-கண்ணன்.

12. கருஞ்செல்வம்-பெருஞ் செல்வம், மாந்தல்-உண்ணுதிருப்பாயாக; எதிர் மறை வியங்கோள் வினைமுற்று, பூவை–உருக்குமணி; உவமையாகு பெயர்.

13. செந்தாமரையவள் - இலக்குமியாகிய உருக்குமணி, நகை முகிழ்த்து–சிரித்து, வீறு சால்-பெருமை மிகுந்த.

14. அம்ம - வியப்பிடைச் சொல், உய்ந்தனம்-பிழைத்தோம், மம்மர்-மயக்கம், கூர்தர-மிக, மறக்குவன் - மறப்பான், மும்மை – மூன்று; பண்பாகு பெயர், முளரி-தாமரை; காரண இடுகுறிப் பெயர், செம்மல்-கண்ணன், நல்கலன்-கொடுத்தானில்லை.

15. கஞல-ஒலிக்க, தேறல்-தேன். நாள் மலர்–அன்றலர்ந்த மலர், தொழுதி-தொகுதி, பல்கு–மிகுந்த, படர்ந்தான்–சென்றான்.

16. முகடு–உச்சி, கீண்டு–கிழித்து, அளகை காவலன்–அளகாபுரிக்கு அரசனாகிய குபேரன். நோக்கினன் மயர்ந்தான்–பார்த்து மயங்கினான்.

17. வில்–ஒளி, கவின்–அழகு, நுதல்–நெற்றி, நேரிவையர்-தோழிப் பெண்கள், செறிய – நெருங்க, இலகு - விளங்குகின்ற, பூண்-ஆபரணம், அயிர்த்தான்–சந்தேகித்தான்.

18. பதி–வீடு, நிதி-செல்வம், பிணை-பெண்மான், போதரும்–வருகிற, வதன மதி, உருவகம்.

# 3. மணிமேகலை

## பாத்திரமரபு கூறிய காதை

இது தமிழிலுள்ள பழைய பெருங் காப்பியம் ஐந்தில் ஒன்று. இதனை இயற்றியவர் **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** என்பவர். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான **மணிமேகலை**யின் வரலாறு இதில் கூறப்படுகிறது. இவ்வரலாறு **முப்பது காதை**களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அமைந்துள்ள இயற்கை வருணனைகளும் அறவுரைகளும் கற்போர்க்கு இன்பம் பயப்பன. பௌத்த சமயக் கொள்கைகள் இந்நூலில் ஆங்காங்கே விளக்கப்படுகின்றன. இந்நூல் கடைச்சங்க காலத்தில் இயற்றப் பெற்றது என்பர்.

### ஆபுத்திரன் தன்னை அடுத்தோர்க்கு உணவளிக்க இயலாமைக்கு வருந்துதல்

ஆங்கவற் கொருநா ளம்பலப் பீடிகை
பூங்கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்:
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்(து)
ஆரிடை யுழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி

வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலும்,
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆரஞர் எய்த,

### சிந்தாதேவி அமுதசுரபி என்னும் பாத்திரத்தை ஆபுத்திரனுக்கு அளித்தல்

"கேளிது மாதோ கெடுகநின் தீ(து)" என
யாவரு மேத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத்தோன்றி,
"ஏடா! அழியல் எழுந்திது கொள்ளாய் :
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது;
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய" தென்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்,

### ஆபுத்திரன் சிந்தாதேவியைப் போற்றி வணங்குதல்

"சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோ ருற்ற இடர்களை வா"யெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி,

### அமுதசுரபியின் உதவியால் ஆபுத்திரன் மன்னுயிர்களின் அரும்பசி களைதல்

ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களு மாவும் மரஞ்சேர் பறவையுந்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்
இழுமென் சும்மை யிடையின் றொலிப்ப
ஈண்டுநீர் ஞாலத் திவன் செயல் இந்திரன்

### இந்திரன் வருகை

பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின்,
தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பும்
ஆருயிர் முதல்வன் றன்முன் றோன்றி
"இந்திரன் வந்தே னியாது நின்கருத்(து)?
உன்பெருந் தானத் துறுபயன் கொள்" கென,

## தனக்கு வரம் வேண்டுவதில்லை என்றும், பசிப்பிணி ஒழிக்கும் அரும்பேறு ஒன்றே போதுமென்றும் ஆபுத்திரன் கூறுதல்

வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்(கு)
எள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்:
''ஈண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினும் கடவுள ரல்ல(து)
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்(கு)
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே!
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை;
உண்டி கொல்லோ, வுடுப்பன கொல்லோ,
பெண்டிர் கொல்லோ, பேணுநர் கொல்லோ,
யாவையீங் களிப்பன? தேவர்கோன்!'' என்(றான்).

—சீத்தலைச் சாத்தனார்.

### குறிப்புரை

**அடி 1–8 :** அம்பலம்-ஊர்ப் பொது இடம். பூங்கொடி நல்லாய்-பூங்கொடி போன்ற மணிமேகலையே. புகுந்தது-நேர்ந்தது, ஆர் இடை உழந்தோர்-அரிய வழியில் வருந்தி வந்தோராகிய கூத்தர் முதலியோர். மலைக்கும்-வருத்துகின்றது. ஏற்று-யாசித்து. ஆர் அஞர்-மிக்க வருத்தம்.

**9–16 :** நியமம்-கோயில். அழியல்-வருந்தாதே. வறம் கூரினும்-பஞ்சம் மிகுந்தாலும். இ ஓடு-இந்த அட்சய பாத்திரம். தான் தொலைவு-தான் (உணவைத் தராமல்) ஒழிவது.

**17–21 :** நந்தா-அழியாத. ஏனோர்-மற்றையோர்.

**22–27 :** விடாஅ-நீங்காதனவாய். பழுமரத்து-பழுத்த மரத்திலே. இழும் என் சும்மை-இழுமென்னும் ஓசையைக் கொண்ட ஒலி.

**28–35 :** பாண்டு கம்பளம் - வெள்ளைக் கம்பளத்தினாலியன்ற ஆசனம். துளக்கியது-நடுங்கச் செய்தது. மன்-தங்கியுள்ள. ஓம்பும்-பாதுகாக்கும்.

**38–48 :** வெள்ளை மகன்-அறிவில்லாத சொல்லையுடையவன். இற-முறியும் படி. எள்ளினன்-இகழ்ந்தனன். புறங்காத்து ஓம்புநர்-பாதுகாத்தலைச் செய்பவரும். திருந்து முகம்-(வருத்தம் நீங்கியதால்) மகிழ்ச்சி கொண்ட முகம். கடிஞை-அட்சய பாத்திரம்.

# 4. மனோன்மணீயம்

பேராசிரியர் ராவ்பகதூர்–P. **சுந்தரம் பிள்ளை** அவர்களால் இந்நூல் இயற்றப் பெற்றது. இவ்வாசிரியர் கி. பி. 1855–இல் ஆலப்புழையிற் பிறந்து 1898–இல் மறைந்தார். இவர் **எம். ஏ.** பட்டம் பெற்றுத் திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் வரலாறு, தத்துவம் முதலியன போதிக்கும் பேராசிரியராய் விளங்கினார்.

## கதைத் தொடர்பு

[**மனோன்மணி** ஜீவகன் என்ற பாண்டியனுக்கு மகள். அவளது உயிர்த் தோழி **வாணி** என்பவள். வாணி **நடராஜன்** என்னும் இளைஞனை மணக்க விரும்பினாள். அவள் தந்தையான சகடர் அவளை மந்திரி குடிலனுடைய மகனை ஒழுக்கம் கெட்ட பலதேவனுக்கு மணமுடிக்க விரும்பினார். வாணி அதற்கு இசையவில்லை. அரசனுக்கும் வாணிக்கும் நடந்த உரையாடல் இங்குப் பாடப்பகுதியாகும்.]

**ஜீவ :**

### மின்னேய்

மருங்குல் வாணீ ! வாராய் இப்புறம் ;
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொன் மதியும்
உன்புத் தியுமுகுத் துழல்வதென் வம்பில் ?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனுமொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னைநீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை ? சீச்சீ!
நகையே யாகும் நீசெய்யும் வகையே.

**வாணி :**

அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே !
நிகழுமென் சிறிய நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா தடக்கு மாயினும்,
பேணி யொருமொழி பேசுவன் :
நேசமில் வதுவை நாசகா ரணமே.

**ஜீவ :**

புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றா ராற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு

வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ? தருமமோ ? சாற்றே.

வாணி :

கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்
ஆக்கப் படும்பொரு ளாமோ ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்று யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்,
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற் களவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றுந் தன்மை யன்றி, யொருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே !

ஜீவ :

ஆமோ, அன்றே, யாமஃ தறியேம்;
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கைய ரென்றுஞ் சுதந்திர பங்கர்;
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடு முளத்தர்;

முதியவுன் தந்தை மதியிலுன் மதியோ
பெரிது ? மற் றவர்தமில் உன்னயம் பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதே வனுக்கே யுடன்படல் கடமை.

**வாணி :**

இலையெனில் ?

**ஜீவ .** கன்னியா யிருப்பாய் என்றும்.

**வாணி :**

சம்மதம்.

**ஜீவ :** கிணற்றிலோர் மதிகொடு சாடில்
எம்மதி கொண்டுநீ யெழுவாய் ? பேதாய் !
கன்னியா யிருக்கில் உன்னழ கென்னும் ?
அரைக்கி லன்றே சந்தனங் கமழும் ?

**வாணி :**

விரைதரு மோசிறு கரையான் அரிக்கில் ?

**ஜீவ :**

நானே பிடித்த முயற்கு மூன்றுகால்
ஆஞ லெங்ஙனம்

**வாணி :**

அரிவையர் பிழைப்பர் ?

(சேடி வர)

**சேடி ;**

சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
கால நோக்கினர்.

**ஜீவ :** சாலவு மினிதே;

ஆசனங் கொணர்தி.
(வாணியை நோக்கி) யோசனை வேண்டா;
எப்படி யாயினுஞ் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்; நன்குநீ யுணர்தி;
ஆயினுந் தந்தன மைந்துநாள்;
ஆய்ந்தறி விப்பாய் வாய்ந்தவுன் கருத்தே.

**வாணி :**

இறக்கினு மிறைவ ! அதற்குயா னிசையேன் ;
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும் மாற்றல ரேறே !

—**ஆசிரியர் சுந்தரம்பிள்ளை.**

## குறிப்புரை

வரி. 1–9. மருங்குல்-இடை, ஆய்ந்த-ஆராய்ந்த, உகுத்து-விட்டு, நச்சியது-விரும்பியது.

வரி. 10–15. அகலிடம்-அகன்ற பூமி, தனி புரந்து-சிறப்பாகப் பாதுகாத்து, நேசம் இல் வதுவை'- அன்பு இல்லாத மணம், நாச காரணம்-அழிவுக்குக் காரண மாகும்.

வரி. 16–20. மங்கையர், தையலார்—பெண்கள், நேயம்-அன்பு, சாற்று-சொல்.

வரி. 21–39 கற்பனை - கல்வியறிவு, ஐயம் - சந்தேகம், ஆக்கப்படும் பொருள்-உண்டாக்கப்படும் பொருள், தாரு-தரு; மரம், நிமல ஊற்று-அழுக்கற்ற ஊற்று நீர். ஆறலைகள்வர்-வழியில் வருவாரை வருத்திக் கொல்லும் கள்வர், உறு துணை-பொருந்திய துணை, அயர்ச்சி-சோர்வு; களைப்பு, நேரிடில்-நேருமானல், இகம்-இவ்வுலக வாழ்வு. பரத்துள சுகம்-மேலுலகத்து வரும் சுகம்.

40–44. கழல்-வீரக்கழல்; மன்னர் காலில் அணிவது, வீக்கிய-கட்டிய.

45-52. பிஞ்சிற் பழுத்த பேச்சு-இளமைப் பருவத்தில் முதியோர் போலப் பேசுதல், சுதந்திர பங்கர் - உரிமை யில்லாதவர், பேதையர்-அறிவு இல்லாதவர், பிறழ்ந்திடும் உளம்-மாறுபடும் மனம், உன் நயம்பேண-உன் நன்மையைப் பாது காக்க.

58–60. விரை தருமோ-மணம் வீசுமோ, "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் "—பழமொழி.

62–70. காலம் நோக்கினர் - அரசனைக் காண நேரம் அறிந்து வரச்சொன் ஞர். சாலவும் - மிகவும், சகடர் – வாணியின் தந்தை, மாற்றலர் ஏறு-பகைவரை அழிப்பதில் ஆண் சிங்கம் போன்ற வன்மையுடையவர்.

# IV. சிறு நூல்கள்

## 1. மீனாட்சியம்மை குறம்

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா;
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை! அம்மே;
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே;
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்;
உனக்கினியெண் ணினகருமம் இமைப்பினிற் கைகூடும்.
என்ஆணை எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகாண் அம்மே.

—குமரகுருபர சுவாமிகள்

## 2. முக்கூடற் பள்ளு

### குயில்

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே
பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையும் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே. 1

### மழை பெய்தல்

காவுக் கிறைவன் ஆகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்தகார்
கடலிற் படிந்து திருவில் கோட்டி
அடல்முக் கூடல் அரியுமாய்ப்
பூவுக் குயர்ந்த கலைமின் னோடு
மேவிக்க மலத் தயனுமாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனுமாய்த்

தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்
தானே யாகி உலகுக் குரிமை
ஊனே யாகி உயிருமாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துப் பொழிந்தபின்
குளிரு கின்றது கோன்க ழுத்தினில்
வெளிறு கின்றது வானமே 2

**பயிர் விளைவு**

பதிந்த நடவுதேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்துமென்மேல் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வர் எனத்தழைத்து முதல் குழைந்தே
பொதிந்த பொதியை நீட்டிப் பூட்டிக் காட்டிப்
புரப்போர் பொன்இணங்குகை போல வணங்கி
எதிர்ந்த கதிர்முளைத்தே இடைபழுத்து
ஏற்ற விளைவுதோற்றந் தோற்றியதே.

## 3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு;
தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலம்தனக்கும்
கூறும் தரமுண்(டு); உன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை;
முருகா! முத்தம் தருகவே!
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா! முத்தம் தருகவே.

## 4. அழகர் கலம்பகம்

பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலை
யையெட்டிப் பார்த்துமந்தி
குதிக்கின்ற மாலிருஞ் சோலைவெற்
பா! நின் குளிர்வதனம்
உதிக்கின்ற திங்கள், மெய் யுற்பலக்
கா(டு), அங் கொழுகுபைந்தேன்
மதிக்கின்ற கட்டழ(கு), எங்கள்கண்
மூழ்கு மதுகரமே.

## 5. குற்றாலக் குறவஞ்சி

சூழ மேதி யிறங்குந் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப்பார் போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர்தென் னூரியநாடே.

### மீனாட்சியம்மை குறம்

இது மீனாட்சியம்மைமீது இயற்றப்பெற்ற குறம். மீனாட்சியம்மை என்பது மதுரையில் உள்ள அம்பிகையின் பெயர். தலைவனிடத்துக் காதல்கொண்ட தலைவியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாகச் செய்யும் பிரபந்தம் குறம் என்று வழங்கப்படும். இதனை இயற்றியவர் குமரகுருபரர்.

முச்சிறங்கை-மூன்று கைந்நிறையளவு.

### முக்கூடற்பள்ளு

இது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநையாற்றின் வடகரையில் உள்ள முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் திருமாலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பள்ளர் வாழ்க்கையைக் கூறுவது. முக்கடலின் வேறுபெயர் சீவலப் பேரி, இது சித்திரநதி, கோதண்டராம நதி, பொருநை நதி ஆகியமூன்று நதிகளும் கூடுமிடத்தில் இருக்கிறது. இங்குள்ள திருமாலின் பெயர்அழகர். இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இவரை ஆதரித்தவர் காவை வடமலேந்திரன்.

1. பள்ளியர் குயிலைநோக்கிக் கூறுதல், சீவலப்பேரி—முக்கூடல். தாவளக் குடிகள்—மருத நிலத்துக் குடிகள், தேர்ப்பாலழகர்—பார்த்தசாரதி.

2. கா-கற்பகச் சோலை, கார்-மேகம், திருவில்கோட்டி-வானவில்லை ஆகாயத்தில் வளைத்து, அரி-திருமால், கடலில் படிந்ததாலும், வில்லை வளைத்ததாலும் மேகம் திருமாலாயிற்று. கலைமின்—சரசுவதி; கலைகின்ற மின்னல். கலைமின்னோடு சேர்ந்ததால் மேகம் பிரமனைப் போன்றதாகும். பணி-பாம்பு.

3. பசப்பு—பசுமை, முதல்வர்—திருமால், பொதி-கதிர்த்தொகுதி, இணங்கு-பொருந்திய, வணங்கி—வளைந்து, தோற்றம்-அழகு.

## திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது ஒருவகைப் பிரபந்தம், பிரபந்தத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்து, குழந்தைக்குரிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடப்படுவது. இது திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைக் குறித்துப் பாடப்பட்டது. குழந்தைக்குரிய பத்துப் பருவங்கள்: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை—அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவாம்.

இந்நூலின் ஆசிரியர் பகழிக்கூத்தர். இவர் இராமநாதபுரத்தை யடுத்த சன்னுசிக் கிராமத்தில் வைணவப் பிராமணர் குலத்தில் தோன்றியவர்.

கந்தும் தரங்கம் - ஒலிக்கும் கடல், சூல்-கருப்பம், வாலுகம் - மணல்மேடு, கான்ற-ஈன்ற, மணி-முத்து, நந்தும் — மதம் பெருகும், கரடம் — கன்னம், மருப்பு-கொம்பு, தந்தம், சாலி—நெற்பயிர், தரம்—தகுதி. அலைவாய்-திருசெந்தூர்.

**அழகர் கலம்பகம் :—** இது மதுரைக்கு அருகேயுள்ள திருமாலிருஞ் சோலை மலையில் உள்ள அழகரைப்பற்றிப் பாடப்பெற்ற கலம்பகம், பலவகைப் பாக்களும் துறைகளும் கலந்து பாடப்படும் நூல் கலம்பகம் எனப்படும்.

பதிக்கின்ற — மேன்மேல் வளர்கின்ற, மந்தி—பெண் குரங்கு, வதனம்-முகம், உற்பலம்—குவளை, மதுகரம்-வண்டு.

## குற்றாலக் குறவஞ்சி

இது வஞ்சிக்கொடி போன்ற குறத்தி தான்வாழும் குற்றால மலையின் வளத்தைக் கூறுவதாகக் கவி புனைந்து இயற்றிய நூல். ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர்.

மேதி-எருமை, வாளை—ஒருவகை மீன், கூழை—குள்ளமான, சந்திரசூடர்-சிவபிரான், குற்றால மலையுள்ள பகுதி தென்னாரிய நாடெனப்படும்.

# V. வருணனை

## கந்துக் வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதைவில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே; 1

பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின்( னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கஎன்று சென்றுபந் தடித்துமே.
தேவராரமார் பன்வாழ்க என்றுபந் தடித்துமே ; 2

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவராரமார் பன்வாழ்க என்றுபந் தடித்துமே. 3

—இளங்கோவடிகள்.

### குறிப்புரை

பொலம் செய்கோதை – பொன்னாற் செய்தமாலை, வில்லிட–ஒளிவிட. தேவர் ஆரமார்பன் – தேவர்க்கரசன். வஞ்சனையால் இட்ட ஆரமணிந்த மார்பினையுடைய பாண்டியன், கந்துகம்-பந்து.

# IV. தனிப்பாடல்கள்

## கண்ட சுத்தி

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்
டகலா துறையும் அகளங்கா,
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே தேவ சிங்கமே,
திக்கு விஜயஞ் செலுத்திவரும்
செங்கோல் நடாத்தும் எங்கோவே.

## ஆற்றுப் படை

தேருளைப் புரவி வாரணத் தொகுதி
   திறைகொணர்ந்து வருமன்ன ! நின்
தேயமே துனது நாமமேது ? புகல்;
   செங்கையாழ் தடவுபாண ! கேள்:
வாரு மொத்தகுடி நீரும் நாமுமத்
   தேவன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்தளித்த வெகு
   வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரும் இப்பரிசு பெற்று மீள
   வரலாகும், ஏகும் அவன் முன்றில்வாய்.
நித்தலச் சிகர மாடமாளிகை
   நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கும்; உயர்வேம்பு நிற்கும் ; வளர்
   பனையும் நிற்கும் ; அதன் அருகிலே
அரசு நிற்கும் ; அரசைச் சுமந்தசில
   அத்தி நிற்கும் அடையாளமே. 2

### குறிப்புரை

1, கண்டசுத்தி என்பது ஒருவர் கருத்தை அறிந்து புலவர் செய்யுளாகப் பாடுவது. இச்செய்யுள் வீரராகவ முதலியார் பாடியதாக வழங்கி வருகிறது.

புடவி-பூமி, அடவி-காடு, நச்சுக்குழல்-பாம்பு, பஞ்சரம்-கூடு, அகளங்கன்-களங்கமில்லாதவன், வாரணம்-யானை.

2. ஆற்றுப்படை-வழிப்படுத்தல், ஆறை நகர்வாண பூபதியைப் பாடிப் பரிசில் பெற்று மீண்ட புலவன் வழியில் வரும் பாணனைக்கண்டு அவனை ஆற்றுப் படுத்தியது.

புரவி-குதிரை, வாரணம்-யானை, யாழ்-வீணை, நித்திலம்-முத்து, ஆர்-ஆத்திப்பூ; ஆத்திமாலை அணிந்த சோழன், வேம்பு-வேப்பமாலை அணிந்த பாண்டியன், பனை-பனைமாலை தரித்த சேரன், அரசு-அரசன், அத்தி-யானை, ஆர், வேம்புமுதலிய மரங்களின் பெயராதலையுங் காண்க.

# உரை நடை

## 1. இலக்கியமும் வாழ்க்கை முறையும்

**திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள். M.A.**

### அரசு

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை அடுத்தது காட்டும் பளிங்குபோல் எடுத்துக் காட்டுவது அந்நாட்டின் இலக்கியமேயாகும். தமிழ் இலக்கியத்தினின்று, தமிழர் நாகரிகம், தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, சமூக நிலை, அரசியல் நிலை முதலிய இன்னோரன்ன பிற பொருள்களைப்பற்றி நன்கு அறியலாமெனினும் ஈண்டுப் பேசப் படும் பொருள், தமிழ் இலக்கியத்தினின்று தமிழ் நாட்டின் அரசு எவ்வாறு விளங்கியது என்பதையும், அவ்வரசின் துணையால் மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு பண்படுத்தப்பட்டது என்பதையும் ஆராய் வதாகும். இனி, சங்க இலக்கியமும் அதற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியமும் அரசினைப் பற்றிக் கூறுவன யாவை என்பதைக் காண் போம்.

பழந்தமிழர், மன்னனைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. தமிழ் மொழி யில் இறைவன் என்ற சொல் கடவுளையும் அரசனையும் குறிக்கும். அதுபோலவே கோவில் என்ற சொல் கடவுளர் உறையும் கோவிலை யும், மன்னன் வதியும் அரண்மனையையும் குறிப்பதாகும். இறைவன் என்ற பெயர் அரசனுக்கு எம்முறையில் பொருத்த முடைத்து என் பதை ஆராய்வோம். 'இறை மாட்சி' என்ற சொல்லுக்குப் பொருள் கூறப்போந்த பரிமேலழகர், 'இறை மாட்சியாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகள். உலகபாலர் உருவாய் நின்று (உலகத் தைக் காக்கும் காப்புக் கடவுள்போல் வீற்றிருந்து) உலகத்தைக் காத்தல் இறை என்றார்,' என்பர். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற திருவாய்மொழி ஈண்டு நோக்கத்தக்கது. தலைவி தன் தோழிக்குக் கூறுவதாகவுள்ள பொரு நராற்றுப் படையின் ஈற்றிலுள்ள ஒரு வெண்பாவை நோக்குவோம்;

" அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன்—திருமார்பின்
மானமால் என்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை."

"தோழி! அரியணையின்மீது வீற்றிருந்த திருமாவளவன் என்ற கரிகாலனை யான் கண்டேன். யான் அவனை எளிய மனிதனாகக் கருதவில்லை. இலக்குமி வீற்றிருக்கும் திரு மார்பையுடைய திருமாலே அவன் எனக் கருதி அவனை வணங்கினேன்," என்றாள் தலைவி.

மன்னர் புகழிற்கு மாயோன் புகழை உவமையாகக் கூறுதல் 'பூவை நிலை' என்ற புறத்துறையின் பாற்படும் என்பர் தொல் காப்பியர்.

" முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "

என்பது பொய்யாமொழி யன்றோ! மன்னன் மன்னுயிர்க்கு உயிர் போன்றவன் என்ற கருத்தில் மோசிகீரனார் என்ற சங்கப் புலவர்,

" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் " (புறம்—186)

என்றார். தேவரினும் மன்னர் சிறந்தவர் என்பர் திருத்தக்க தேவர் தேவர் ஒருவனுக்கு இப்பிறவியில் நன்மையோ தீமையோ செய்ய எண்ணினால், அதை உடனே செய்ய இயலாது. ஆனால் மன்னன், ஒருவனுக்கு நன்மையோ தீமையோ செய்ய நினைப்பின், அதை உடனே செய்து முடிக்க வல்லவனாகின்றான்.

" அருளு மேலரசு சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தேனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ ?"

(சிந்தாமணி—247)

என்ற திருத்தக்க தேவரின் திருவாக்கிற்கு இலக்காக 'அரசன் அன்று சாதிக்கும்; தெய்வம் நின்று சாதிக்கும்' என்பது பெறப்படுகிறது.

அரசு பதவி என்பது இத்துணைச் சிறப்புடையதேனும் மிக்க பொறுப்பு வாய்ந்ததாகும். இதனாலன்றோ அரசாட்சியானது அரச பாரம் என்றே வழங்கப்படுகின்றது. " Uneasy lies the head

**that wears the crown**" என்ற ஆங்கில அறிவுரையினைத் தமிழ் மன்னர் நன்கு உணர்ந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. மழை பெய்யாதிருக்கும்போதும் உயிர்கள் துன்பம் அடையும்போதும் மன்னனுக்குக் கவலை உண்டாகும். எனவே, அரச குடியிற் பிறந்து அரசாள்வது துன்பமே ஒழிய அதில் சிறப்பில்லை என்ற கருத்தில் சேரன் செங்குட்டுவன் கூறுவதைக் காண்க:

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென" **(சிலப்பதிகாரம்)**

கைகேயி இராமனைக் காட்டிற்குப் போகப் பணித்தபோது வண்டியில் பூட்டப்பட்ட ஓர் எருதினை அருட்குணமுடையான் ஒருவன் அவிழ்த்து விட்டால், அந்த எருது எவ்வாறு மகிழ்ச்சி அடையுமோ, அவ்வாறே இராமன் அரசபாரம் பெறுவதினின்றும் விலகியதற்கு மிகவும் மகிழ்ந்தான் என்பர் கம்பர். அரசபாரத்தின் பொறுப்பினை எடுத்துக் காட்ட வந்த சேக்கிழார், "அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ தான்" என்றார்.

தமிழ் நாட்டில் கோனாட்சியே (**Monarchy**) சிறப்பாக நடைபெற்று வந்தது. சேர சோழ பாண்டியர் என்ற வேந்தர் குடும்பங்கள் தமிழரிடையே மிகப் பழமையுடையனவாக விளங்கின. பழங்குடி என்பதற்குப் பொருள்கூற வந்த பரிமேலழகர், பழங்குடி என்பது தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார். 'தொன்று தொட்டு வருதலாவது சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்' என்றார். தந்தையின் பின் மைந்தன் அரசாள்வது மரபாகும். வாட்போரில் வெற்றி பெற்ற அரசிளங் குமரனுக்கு அந்நாட்டில் உள்ளார் வேண்டிய சிறப்புக்கள் செய்து அவனைத் தம் அரசனாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது 'பிள்ளையாட்டு' என்று தொல் காப்பியர் கூறும் புத்துறையால் விளங்குகின்றது. எனவே அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குடிமக்கள் அக்காலத்தில் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

இனி, அரசனது ஆட்சிமுறை எவ்வாறு விளங்கியது என்பதைக் காண்போம். அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என

இவைகள் அரசனுக்கு அங்கங்களாம். மன்னன் காட்சிக்கு எளியனு யும் கடுஞ் சொல் அற்றவனுயும் இருத்தல் வேண்டும். அக்காலத் தில், ஆட்சிபுரியும் அரசனுக்குத் துணையாக 'ஐம்பெருங்குழு', 'எண் பேராயம்'" என்ற இரண்டு பேரவைகள் விளங்கின. அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதுவர், சாரணர் என இவர்கள் கூடியது ஐம்பெருங்குழுவாம். கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற் றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்பாரடங்கியது எண்பேராயமாகும். இவருள் கர ணத்தியலவர் என்பார் அரசாட்சியின் வரவு செலவாகிய கணக்குப் பார்ப்பவர். அரசனது ஆணையை நிறைவேற்றும் அதிகாரிகள் கரும விதிகள் எனப்படுவர். கனகச்சுற்றம் என்பார் பொருட்காப்பாளர். கடைக்காப்பாளர் என்போர் அரண்மனைக் காவலர். நகரமாந்தர் என்போர் நகரத்திலுள்ள மூதறிஞர். எனவே நகரத்திலுள்ள சில மூதறிஞரும் அரசன் அவையில் இடம் பெற்றனர் என்பது புலனுகின் றது. நீதி தவருது அரசாட்சி செய்வதே மன்னனுக்கு வெற்றியாகும் என்பதைத் தமிழ் நாட்டு மன்னர் நன்கு உணர்ந்தனர். மன்னனுக்கு வெற்றி தருவது வேல் அன்று செங்கோலே என்பதனைப் புலவர்கள் அரசர் பலர்க்கும் அறிவுறுத்தினர்.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" **(புறம் - 55)**

என்ருர் ஒரு புலவர். மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதி அரசா ளும் வேந்தனைக் குடிகள் மிகவும் விரும்புவர். உதாரணமாக இராம பிரானுடைய முடிசூட்டு விழாவினைக் கேட்ட அயோத்தி மக்கள் மிக வும் மகிழ்ச்சி அடைந்து இராமன் அரசாள்வது குடிகளே அரசாள்வது போலாகும் என்ற கருத்தில்,

"பாவமும் அருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுதனி யன்றுபொது வென்பார்."

எனக் கம்பர் கூறியதைக் காண்க. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்பதற்கு ஏற்ப, அரசன் செங்கோலனுயின் அவன் நாட்டு மக்களும் நீதியினின்று வழுவார். குடிமக்களுக்கு நல்லொழுக்கத் தைப் புகட்டுபவன் வேந்தன் என்பது,

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே." **(புறம் - 312)**

என்ற புறப்பாட்டால் விளங்குகின்றது. மன்னனது முறை காவல் குறையின், நாட்டில் மாதவர் நோன்பும் பெண்களின் கற்பும் காண் பது அரிதாகும் என்பதை,

"மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றால்" (மணிமேகலை 22: 208-9)

என்று மணிமேகலை வற்புறுத்துகின்றது. செங்கோல் முறையினைத் தமிழ் மன்னர் உணர்ந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் தருவேன். பசுவின் கன்று இறப்பதற்குக் காரணமாயிருந்த தன் மைந்தன் வீதி விடங்கனை மனுச்சோழன் என்பான் தேர்க்காலில் கிடத்தித் தேரினை அவன் மீது செலுத்தினான் என்பதைப் பெரியபுராணம் கூறும். கோவலன் கொலையுண்டதற்குத் தானே காரணம் என்பதை உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்ததை,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே"

(சிலப்பதிகாரம் 20: 74 - 78)

என இளங்கோவடிகள் கூறும் மாற்றம் தமிழ்நாட்டு மன்னர் செங்கோல் முறையினின்று தாம் தவறியது உணர்ந்த பின் உயிர் வாழார் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இனி, அரசனுக்குரிய தொழில்கள் எவை என்பதை ஆராய்வோம்: ஓதல், வேள்வி செய்தல், ஈதல், காத்தல், தண்டித்தல் என அரசர்க்கு ஐவகைத் தொழில் உண்டு என்பர் தொல்காப்பியர். அரசன் நீதிநூல்களைக் கற்றவனும், யானையேற்றம் படைக்கலம் பயிலல் முதலியவற்றில் பழக்கமுள்ளவனும் இருத்தல் வேண்டும். அரசன் கல்வியின் பயனால் அறிவுடையவனா யிருப்பின் அது தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன் படுவதால் அரசனுக்குக் கல்வி இன்றியமையாததாகும். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற அரசர்களின் பெயரிடைக் காணும் அடைமொழிகளால் பண்டைக்கால மன்னர் வேத வேள்விகள் இயற்றினர் என்பது பெறப்படுகின்றது. சேர சோழ பாண்டியராகிய முடிமன்னரும் பாரி, ஆய், அதியமான் முதலிய கடையெழு வள்ளல்களும் புலவர் பெருமக்களை ஆதரித்து வந்த வரலாற்றால் மன்னரின் கொடைச் சிறப்பு விளங்குகின்றது. எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தினைப் பாடிய அரி

சில்கிழார் என்ற புலவருக்கு அப் பாட்டுடைத் தலைவனாகிய பெருஞ் சேர லிரும்பொறை என்ற அரசன் ஒன்பது நூறாயிரம் பொற்காசு பரிசில் கொடுத்ததன்றித் தனது அரச பதவியினையே புலவருக்கு அளித்தான். ஆனால் அப்புலவர் அவ்வரச பதவியை அவனுக்கே மீட்டும் திருப்பிக் கொடுத்து அவனிடம் தாம் அமைச்சராய் விளங்கினார். மன்னன் பிறருக்குப் பொருள் வழங்குவானே யன்றி, குடிமக்களிடமிருந்து தான் பரிசு பெறமாட்டான் என்பது 'பிறரைத்தா னிரப்பறியலன் இரந்தோர்க்கு மறுப்பறியலன்' (புறம்-239) என்ற புறப்பாட்டால் தெரியவருகின்றது.

இவ்வுலகத்தில் வாழும் மன்னன் தன் நாட்டில் வாழும் மக்களுக்கு, தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், ஏனை உயிர்களால் வரும் ஐந்து அச்சங்களையும் போக்கி ஆளுதல் வேண்டும் என்பர் சேக்கிழார். குற்றம் செய்யும் மக்களை மன்னன் தண்டித்தல் வேண்டும். தீக்கொளுத்துபவர், நஞ்சிடுபவர், கொலைசெய்வோர், திருடர், வழியில் கொள்ளை அடிப்பவர், ஊரில் உள்ள பொருளைச் சூறையாடுபவர், பிறர் மனை விழைபவர் ஆகிய இவர்களை அரசன் கொன்று ஒழுக்கமுடைய பெரியோரைக் காப்பாற்றுதல் வேண்டும். இவ்வாறு அரசன் செய்தல் உழவன் ஒருவன் தன் பயிர்க்குச் சேதம் விளைக்கும் களைகளைப் பிடுங்கிப் பயிரைக் காப்பதைப் போன்றதாகும் என்ற கருத்துடன் விளங்கும்,

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்"

என்ற திருக்குறள் ஈண்டு நோக்கத் தக்கது.

தமிழ் நாட்டில் அரசனுக்குரிய வருவாய் எவை என்பதை இனி ஆராய்வோம்: மக்கள் தம் நிலத்தில் விளைந்த விளையுளில் ஆறில் ஒரு பகுதி மன்னனுக்குக் கொடுத்தனர். இல்லறத்தான் ஒருவன் தனக்குள்ள பொருளை, தென் புலத்தார், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான், அரசன் என அறு வகையாகப் பிரித்துக்கொண்டான் என்பது, 'தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்(கு) ஐம்புலத்தாறோம்பல் தலை' என்ற திருக்குறளின் விளக்கவுரையால் விளங்குகின்றது. தன் குடிமக்களில் சிலர் வறுமையால் பிடிக்கப்பட்டு அரசனுக்கு வரி செலுத்த இயலாத நிலையில் இருந்த போது அரசன் அவர்களிடத்து வரி வாங்கவில்லை என்பதற்கு இலக்கியச் சான்று உள்ளது.

வெள்ளைக்குடி நாகனார் என்பவர் தம் நிலங்களுக்குரிய வரிப் பணத்தைச் செலுத்த இயலாத தம் நிலையைச் சோழன் கிள்ளிவளவனிடம் முறையிட, அவ்வளவன் அந்நிலங்களை இனாமாகவே அப்புலவர்க்குக் கொடுத்துவிட்டான். மன்னர் கடல் வாணிகத்துக்குரிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கம் வாங்கினர் என்பது பட்டினப்பாலையில் வந்துள்ள கரிகால் வளவனின் சுங்கச் சாலையின் சிறப்பால் தெரிகின்றது. உள்நாட்டு வாணிகத்திலும் அரசனுக்குச் சுங்கம் கிடைத்தது என்பது 'சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி' என்ற பெரும்பாணாற்றுப்படையால் விளங்குகின்றது. சுங்கம் என்பது அக்காலத்தில் உல்கு என்ற பெயரால் வழங்கப்பட்டது. இவைகளன்றிச் சிற்றரசர்களும் பிறரும் முடிமன்னருக்குத் திறை செலுத்திவந்தனர். சிலர் தம் திறைகளைக் காசாகச் செலுத்தினர். குடிமக்கள் சிலர் தம் நிலத்தில் விளையும் பண்டங்களையும் அரசனுக்குத் திறையாகச் செலுத்தினர் என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். இவ்வாறு குடிகளிடத்துப் பெற்ற பொருளினை மன்னன் நாட்டின் நலத்திற்கே செலவிட்டு வந்தான். கரிகால் சோழன் குடிகளின் பயிர்த் தொழிலுக்குப் பயன்படும் வண்ணம் காவிரி ஆற்றிற்கு அணைகட்டி நாட்டின் நீர்வளத்தைப் பெருக்கினான். தமிழ் மன்னர் பூஞ்சோலைகளையும், தெருக்களையும் சிறந்த முறையில் அமைத்தனர். அரசனது பிறந்த நாளினைப் 'பெருநாள்', 'பெருமங்கலம்' என வழங்கிக் குடிமக்கள் சிறந்த முறையில் கொண்டாடினர்.

தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் விளங்கிய போர், அறப்போரன்றி மறப்போரன்று. இத்துறையில் அரசர் சாம, பேத, தான, தண்டம் என்ற முறையினைக் கையாண்டனர். அரசன் போர் தொடங்குவதற்கு முன்னர், குறிப்பிட்ட நன்னாளில் தனது வெற்றிவாளையும் கொற்றக்குடையினையும் யானைமேலேற்றிக் கோட்டைக்கு வெளியில் செலுத்துவதுண்டு. இதனை 'நாட்கோள்' என்பர் தொல்காப்பியர். பண்டை நாளில் அரசனுக்குத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என நால்வகைச் சேனைகளும் இருந்தன. அரசர் சிலர்க்குக் கப்பற்படையும் உண்டு. வாள், வில், வேல், குந்தம், சக்கரம் முதலியன போர்க்கருவிகளாக விளங்கின. புலித்தோலாற் செய்த கவசத்தை வீரர்கள் அணிவதுண்டு. •போருக்குப் புறப்படுவ

தற்கு முன் மன்னன் தன் படைகளுக்கு விருந்தளிப்பான். இதற்குப் 'பெருஞ்சோற்றுநிலை' என்பது பெயர். போர் நாட்டில் ஒரு குறிப் பிட்ட இடத்தே நிகழும். போர் துவங்குவதற்கு முன் ஓர் அரசன் தான் போர் துவங்கப்போவதாகவும் அவ்வூரிலுள்ள பசு, பார்ப் பன மக்கள், பெண்டிர், பிணியுடையோர், மக்கட் பேறு அற்றோர் முதலியோர் அவர்க்குரிய பாதுகாப்பான இடத்துக்குப் போகலாம் என்றும் அறிவிப்பான். பகைவரின் பசுக் கூட்டத்தைக் கவர்தல் போரின் தொடக்க மாகும். இதனை 'வெட்சித்திணை' என்பர். போரில் தமது பல்வேறுபட்ட வீரச் செயல்களைப் பிறருக்கு எடுத்துக் காட்ட வேண்டி மன்னனும் அவனது வீரர்களும் வஞ்சி, உழிஞை, வாகை முதலிய பூக்களை அணிவர். போர் நடக்குங் காலத்தில் அஞ் சிப் புறங்காட்டிச் செல்லும் வீரர், நடுங்கும் உள்ளமுடையோர், தலை மயிர் குலைந்தோர், படையிழந்தோர் ஆகிய இவர்மீது வீரர் அம்பினைச் செலுத்தார். இதுவே பண்டைக்கால அறப் போருக்குச் சான்றாக விளங்குகின்றது. போரில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மன்னன் பொன்னாலாகிய வாகைப் பூவினை அளிப்பதுண்டு. வீரத்துடன் சண்டை செய்து போரில் இறந்தவர்க்கு வீரக்கல் என்ற நடுகல் நாட்டுவது பண்டைக்கால மரபாகும்,

அக்காலச் சமய நிலையை நோக்கும் போது மன்னன் குடிகளுக் குச் சமயத் துறையில் முழு உரிமை அளித்ததாகத் தெரிகின்றது. அருகன், அறுமுகன், இந்திரன், காமன், சிவன், திருமால், பல தேவன், பித்தன் முதலிய கடவுளர்க்குத் தனிப்பட்ட கோவில்கள் தமிழ் நாட்டில் விளங்கின என்பதிலிருந்து மக்கள் அவரவர்க்குகந்த கடவுளரை வழிபட்டனர் என்பது பெறப்படுகின்றது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே நாட்டில் சைவ வைணவ சமண சமயத் தார்க்குள் பூசல் ஏற்பட்டது என்பது வரலாற்றால் அறியக் கிடக்கும் உண்மையாகும்.

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழர், மன்னரைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதும், தமிழ் நாட்டில் முடியாட்சியாகிய கோனாட்சியே சிறந்த முறையில் நடை பெற்றது என்பதும், பண்டைக் காலப் போர் அறப்போராக விளங்கியது என்பதும், குடிமக்களுக்குச் சமயத் துறையில் உரிமை அளிக்கப்பட்டது என்பதும், ஒருவாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றின் விரிவினைத் தமிழ் இலக் கியக் கடலுள் புகுந்து காண்மின்.

**I. பொருள் கூறுக :—**

பளிங்கு, உலகபாலர், சான்று, அமளி, மாயோன், பூவைநிலை, அமைச்சு, பேரவை, இரப்பு, சூறை, விழைபவர், திறை.

**II. வாக்கியங்களில் அமைக்க :—**

அடுத்தது காட்டும் பளிங்குபோல், பண்படுத்தப்பட்டது, உலகபாலர் உரு வாய் நின்று, உவமையாகக் கூறுதல், திருவாக்கிற்கு இலக்காக, மிக்க பொறுப்பு வாய்ந்தது, தொன்றுதொட்டு, காட்சிக்கு எளியன், அறிவுறுத்தினர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் கருதி.

**III. விடை எழுதுக :—**

1. நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுவது எது ?
2. தமிழ் இலக்கியத்திலிருந்து நாம் அறிவன யாவை?
3. பழந்தமிழர், மன்னனைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதற்குச் சான்று கூறுக.
4. திருத்தக்க தேவர் யார் ?
5. "மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம்" என்று சேரன் செங்குட்டுவன் கூறக் காரணம் என்ன ?
6. பழங்குடி என்பதற்குப் பரிமேலழகர் காட்டும் உரை யாது ?
7. அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்குப் பழங்காலத்திலே உண்டு என்பது எதனால் பெறப்படுகிறது ?
8. அரசனுக்குரிய அங்கங்கள் எவை ?
9. ஐம் பெருங்குழு எனப்படுவது எது ?
10. கருமவிதிகள் என்பார் யார் ?
11. பொருட் காப்பாளருக்குப் பழங்காலத்தில் வழங்கிய பெயர் யாது ?
12. மன்னனுக்கு வெற்றி தருவது எது ?
13. காவலன் காவல் இன்றெனில் நாட்டில் எவை அரிதாகும் ?
14. செங்கோல் முறையினைத் தமிழ் மன்னர் உணர்ந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் தருக.
15. அரசனுக்குரிய தொழில்கள் எவை ?
16. மக்களுக்குத் தோன்றும் ஐவகை அச்சங்கள் எவை ?
17. 'பெருநாள்' எனப்படுவது எது ?
18. போரில் மன்னர் மேற்கொண்ட நால்வகை முறைகள் எவை ?
19. நாட்கோள்—பொருளை விளக்குக.
20. தமிழர் எவர்மீது அம்பினைச் செலுத்தார் ?
21. பழங்காலத்தில் குடிகள் சமயத்துறையில் முழு உரிமை பெற்றிருந்தனர் என்பது எவ்வாறு விளங்கும் ?

# 2. அவன் யார் ?

மகாமகோபாத்தியாய. டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர்.

தமிழ் இலக்கிய நூல்களில் இப்பொழுது நமக்குக் கிடைப்பன வற்றுள் மிகவும் பழையன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதி னெண் கீழ்க்கணக்கு என்பனவாம். இவற்றைச் சங்க நூல்களென்று கூறுவர். கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்களாற் பாடப்பெற்ற செய்யுட்களை உடைமையின் இவை இங்ஙனம் வழங்கப்படுகின்றன. இந்த நூல்களால் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்த புலவர் வரலாறுகளையும், அவர்களை ஆதரித்துப் போற்றிய செல்வர்கள் வர லாறுகளையும், அக்காலத்துத் தமிழ் நாட்டினரது நாகரிக நிலை, ஒழுக் கம் முதலியவற்றையும் செவ்வனே அறிந்து கொள்ளுகிறோம். புற நானூறு முதலிய நூல்களால் பல அரசர்களுடைய சரித்திரங்களையும், சிற்றரசர்களுடைய வரலாறுகளையும், வீரப் பெருமக்கள் அருஞ் செயல்களையும் தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய குணங்களுட் சிறந்தனவாகக் காணப்படுவன வீரமும், ஈகையுமாம். வெற்றிச் சிறப்பும் கொடைச் சிறப்புமாகிய இவ்விரண்டு சிறப்புக்களை அவ்வர சர்கள் தங்களுடைய வாழ்வுக்கு இரண்டு கண்ணாகக் கொண்டு வாழ்ந் தார்கள். தங்களுக்கு எவ்வகையான குறை நேர்ந்தாலும் அதனை அவர் கள் இழிவாகக் கருதார்கள். வீரமிலரென்றேனும், கொடை இயல்பில ரென்றேனும் கூறப்படுவதைக் காட்டிலும் இறந்துபடுவதை அவர்கள் மேலாக விரும்புவார்கள்.

"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து"

என்ற குறள் வீரமின்மையால் வாழ்வு பயனற்றொழியும் என்ற அரிய கருத்தை வெளியிடுகின்றது. இப்படியே,

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்ற குறள் ஈயாமல் இருப்பதினும் இறந்து படுதல் இனியதென்று கூறுகின்றது. இவ்விரண்டும் பண்டைக் காலத்துப் பெருமக்கள் கடைப்பிடித்த பேரறம்.

இங்ஙனம் வாழ்ந்தவர்களுள் **கண்டீரக்கோப்பெருநள்ளி** என் பவன் ஒருவன். அவன் ஒரு சிற்றரசன்; ஏழு வள்ளல்களில் ஒரு

வன்; தோட்டி யென்னும் மலைக்குத் தலைவன். அவனைப் புலவர் பலர் பாடிய செய்யுட்கள் புறநானூற்றில் இருக்கின்றன. அவற்றுள் **வன்பரணர்** பாடிய 150-ஆம் செய்யுளிற் கண்ட வரலாறு இங்கே சில வேறுபாடுகளுடன் வெளியிடப்படுகிறது.

ஒரு பெரிய மலையின் மேலுள்ள காட்டு வழியில் ஒரு புலவன் தன் சுற்றத்தாருடன் நடந்து சென்றான். அவனுடைய ஓய்ந்த நடையும் முகத்திலுள்ள வாட்டமும் பல நாளாக அவன் பட்டினி கிடந்த நிலையைப் புலப்படுத்தின. உடன் வந்த சுற்றத்தாருடைய நிலையும் அப்படியே இருந்தது. அவனது இடையிலுள்ள ஆடை கறுப்படைந்தும் கிழிந்தும் மக்கியும் இருந்தது. குளிர்காலத்தில் மழைத்துளியால் நனைந்த பருந்தினது கரிய சிறகைப்போல அது தோற்றியது. அவனுக்கு 'நாம் எங்கே போகிறோம்?' என்ற நினைவுகூட இல்லை, 'யாரிடம் போகவேண்டும்?' என்ற குறிப்பும் இல்லை. கால்போன வழியே போய்க்கொண்டிருந்தான், அவனைத் தொடர்ந்து அந்தப் பட்டினிச் சுற்றத்தார் சென்றனர்.

கால்கள் ஓய்ந்தன. சிறிது இளைப்பாறலாமென்ற எண்ணம் புலவனுக்கு உண்டாயிற்று. அம்மலைவழியே இருந்த ஒரு பெரிய பலா மரத்தடியில் அவனும் சுற்றத்தாரும் தங்கினார்கள். 'எங்கே போவது? என்ன பண்ணுவது?' என்று திக்குத் தெரியாமல் அலைகின்ற அவர்களுக்கு எதிரே ஒரு வீரன் தோன்றினான். அவன் அந்தக் காட்டில் வேட்டையாடி விட்டு வந்தான். அவன் கையிலிருந்த வில்லைப் பார்த்தாலே ஒரே காலத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விடுபவன் அவனென்று தோற்றியது, அவன் காலில் அழகிய வீரக்கழல் இருந்தது. அவனுடைய உச்சியில் ஒரு சிறந்த நீலமணி ஒளி வீசியது. அவனது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலே புலவனுக்கு அவனிடத்தில் ஒரு பெருமதிப்பு உண்டாயிற்று. அஞ்சலி செய்த வண்ணமே புலவன் எழுந்தான். பாவம்! நெடுந் தூரம் நடந்து வந்த வலியினால் அவனது கால் அவன் ஸ்வாதீனத்தில் இல்லை; நடுங்கியது. வீரன், "பேசாமல் அப்படியே உட்காருங்கள்" என்று கையமர்த்திப் புலவனை இருக்கச் செய்தான். அனுடைய வார்த்தைகள் அன்பில் ஊறி வெளிவந்தன.

புலவனும் அவனுடைய சுற்றத்தாரும் பசிப்பிணிக்கு இலக்காகி உயிரை விடும் தறுவாயிலுள்ளனரென்பதை அவ்வீரன் அறிந்து

கொண்டான். ''நீங்கள் எந்த ஊர்? எதற்காக வருகிறீர்கள்? யார் வரச் சொன்னூர்கள்? என்னைத் தெரியுமா?'' என்ற கேள்விகளை அவர்களிடம் கேட்கவில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுக்கு முதலில் வேண்டுவது ஆகாரமே என்பதை அவன் நன்ருக அறிந்தான். ஆதலின், தான் வேட்டையாடிக் கொணர்ந்திருந்த மான் தசையை ஓரிடத்தில் வைத்து விட்டு அங்கிருந்த சுள்ளிகளைப் பொறுக்கி ஒரு கட்டையிலே தீயைக் கடைந்து மூட்டினுன். அவனுடன் வந்திருந்த இளைஞர்கள் காட்டு வழி யில் தனித்தனியே பிரிந்து விட்டார்கள். அவர்களெல்லாரும் வரு வதற்குமுன் தன் கையாலேயே மூட்டிய அத்தீயில் அத்தசையைச் சுட்டுப் புலவனுக்கும் பிறருக்கும் கொடுக்கவேண்டுமென்பது அவன் ஆசை. அவ்விளைஞர்கள் வரும் வரையில் பசி காத்திருக்குமா?

மிக்க விரைவில் நெய்விழுதுபோல் இருக்கும் வெள்ளிய நிணத் தைப் பக்குவம் பண்ணிச் சுடச் சுடப் புலவனுக்கும் உடனிருந்தவர் களுக்கும் அவ்வீரன் கொடுத்தான். ஆகாரத்தைக் கண்டு எத்தனையோ நாளான அவர்களுக்கு அந்த உணவு தேவாமுதத்தைப்போல் இருந் தது. சுடச்சுட இருந்த அந்த ஆகாரம் அவர்களுடைய சுடுபசியை நீக்கியது.

அதுவரையில் புலவனுக்குத் தன்னைச் சுற்றிலுமுள்ள காட்சிகளைக் கவனித்துப் பார்க்கும் உணர்ச்சியில்லை. பசி எல்லாவற்றையும் அமுத்தி மேலோங்கியிருந்தது. வயிற்றில் ஆகாரம் விழுந்தவுடன் அவனுடைய கண்ணுக்கும் மூக்குக்கும் மற்றப் பொறிகளுக்கும் உணர்ச்சி உண்டாயிற்று. அருகிலுள்ள அருவி நீரைக் கையால் அள்ளி அள்ளிக் குடித்தான். யாவரும் குடித்து ஏப்பம் விட்டார்கள். புலவனுடைய கண்கள் அம்மலையிலுள்ள மரச்செறிவைக் கண்டு களித்தன; அவனுடைய உடம்பு அந்தக் காட்டின் குளிர்ச்சியை உணர்ந்தது; அவனுடைய மூக்கோ காட்டு மலர்களின் நறுமணத்தை நுகர்ந்தது. " ஆகா! என்ன அழகிய மலை!" என்று பரம திருப்தியோடு அவன் அந்த மலையையும் காட்டையும் கண்ணூரப் பார்த்து மகிழ்ந்தான்; அப்பால் தனக்கும் தன் சுற்றத்தாருக்கும் விருந்தளித்த வீரனை நோக்கினுன். என்ன அழகிய கோலம்! அவ னைப் பிரிவதற்கு மனம் வரவில்லை. ஆயினும் பிரியத்தானே வேண்டும்.

''தெய்வம்போல வந்து உதவி செய்தீர்கள், நாங்கள் போய் வருகிறோம்'' என்ருன் புலவன்,

"அப்படியா! நீங்களெல்லோரும் நன்றாகப் படித்தவர்களைப் போலவே காணப்படுகிறீர்கள். உங்களுக்குப் பரிசாக ஏதாவது கொடுக்கவேண்டும். காட்டு வாசிகளாகிய எங்களிடத்தில் என்ன உயர்ந்த பொருள் இருக்கிறது? இவற்றையாவது பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் சொல்லிக்கொண்டு அவ்வீரன் தன் கழுத்திலிருந்த பலமுத்து வடங்களாலாகிய ஆரத்தையும், கையிலணிந் திருந்த பொற்கடகத்தையும் கழற்றினான்; புலவனது கையிற் கொடுத்து அஞ்சலி செய்தான்.

புலவனுக்கு உண்டான வியப்பின் அளவை வரையறுத் துச் சொல்ல முடியுமோ? முன்பின் அறியாத இவன் நம்மை உபசரித்து இவ்வளவு உயர்ந்த பரிசைத் தருகிறான். கொடுப்பதோ மிக அரிய பரிசு; சொல்வதோ 'நான் எதைக் கொடுக்கப் போகி றேன்' என்ற பணிவான சொல். "இந்தக் குணக்குன்றாகிய பெரி யோன் யாரோ தெரியவில்லையே?" என்ற எண்ணத்துடன், "தங்க ளுடைய நாடு யாதோ?" என்று புலவன் மெல்லக் கேட்டான். அவ் வீரன் ஒன்றும் கூறவில்லை. "தங்கள் திருநாமத்தை யான் அறிந்து கொள்ளக் கூடுமோ?" என்று பணிவுடன் பின்னும் புலவன் கேட்க, அதற்கும் விடையில்லை.

"அவற்றைப் பற்றி நீங்கள் ஏன் அறிந்து கொள்ளவேண்டும்? நல்லது; போய் வாருங்கள், வந்தனம்" என்று சொல்லி அரைக்கணத் தில் அவன் காட்டுக்குள் போய்விட்டான்.

"அவன் யார்? அவன் யார்?" என்று புலவன் நெஞ்சம் கேட் டுக் கொண்டே யிருந்தது.

மிக்க உவகையுடன் அவன் தன் சுற்றத்தாரோடு புறப்பட்டான். வழியில் கண்டவர்களிடமெல்லாம், தன்னைப் போற்றிய உபகாரியைப் பற்றிச் சொல்லி, "அவன் யார்?" என்று கேட்டான். "அவனா? அவன்தான் நள்ளி! இந்தத் தோட்டி மலைக்குத் தலைவன்" என்று அவர்கள் அவனுக்குச் சொன்னார்கள்.

"நள்ளியா!" என்று புலவன் ஸ்தம்பித்து விட்டான். நள்ளி யைப் பற்றியும், தோட்டி மலையைப் பற்றியும் உலகமெல்லாம் புகழ் வதை அவன் கேட்டிருந்தான். தான் வந்த மலை தோட்டியென்றும், தான் கண்ட வீரன் நள்ளியென்றும் அதுகாறும் அவன் அறியவில்லை; அவ்வீரனும் அறிவித்துக் கொள்ளவில்லை. அவ்வள்ளல் தன் கடமை

யைப் பிறர் அறியாமற் செய்துவிட்டு அகன்றான். புலவனே அவன் செய்த உபகாரத்தை அது முதல் உலக முழுவதும் அறிவித்துக் கொண்டு வாழ்ந்தான்.

I. **பொருள் கூறுக :—**

விழுப்புண், கடகம், திருநாமம்.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

வாழ்வுக்கு இரண்டு கண்ணுகக் கொண்டு, ஓய்ந்த நடை, கால்போன வழியே போய், கண்ணீரைப் பார்த்து.

III. **விடை எழுதுக:—**

1. சங்க நூல்கள் எனப்படுபவை எவை ?
2. தமிழருடைய இரண்டு சிறந்த குணங்கள் எவை ?
3. எப்பொழுது சாதல் இனிதாகும் ?
4. கண்டீரக்கோப் பெருநள்ளி யார் ?
5. அவனது மலை எது ?
6. வீரன் புலவரை எவ்வாறு உபசரித்தான் ?
7. வீரன் புலவருக்குக் கொடுத்த பரிசு யாது ?
8. அவன் யார் ?—சுட்டுப் பெயர் யாரைக் குறிக்கிறது ?

# 3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., பிஎச். டி;**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில், ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" என முழங்கினர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். "ஒற்றுமையாக உழைத்திடுவோம், நாட்டில் உற்ற துணை வராய் வாழ்ந்திடுவோம்" என்றார் கவிமணி தேசிக விநாயகம். இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்றாகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் ஒடிக்கு மாறு பணித்தார் என்றும், ஒன்றினை ஒடித்த பிள்ளைகள் கட்டினை முறிக்கக்கூடாத காரணத்தை வைத்து. அவர்களுக்கு ஒற்றுமையுப தேசம் செய்தார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்மில் பலர் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயிற்றோகையை நிரம்ப நிரம்ப, வாரி

வாரிப் போட்டுக்கொண்டே யிருந்தால்; அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ மிகவும் நொய்மையானது. வண்டியின் அச்சோ மிகவும் வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலும் மேலும் திரண்டு கூடித் தோகைகள் வருவதால் அச்சு இற்றுப்போகிறது. அதைப்போலவே, எத்துணை எளியராயினும், நமது பகைவர் சேர்ந்து சேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரியதாயினும் பயனின்றிப்போம். நாமே ஒற்றுமை மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப் பெரிதன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக் கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், "பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" என்று வழங்கியருளினர்.

நம் சுற்றத்தாரேயன்றி நமது ஏவல் செய்வோர்தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாராயின், அவ்வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாறாகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது உறுதி. கவலையேற்பட்டாலோ, கருமயிர் நரைத்தல் ஒரு தலை. எனவே, நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள் இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம். இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப்படுகிறது. முன்னாளில் பிசிராந்தையார் என்னும் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றவில்லை. சில புலவர், அவரை ஒரு நாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, "யான் கண்டனையர் என் இளையரும்' என்பது அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய்வோரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரிகின்றனர். என் இல்லத்தில் சண்டைத் தொல்லைகள் இல்லை' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலகமும் விளையக்கூடிய வேளைகளில், புலவர்கள் சிலர் ஒற்றுமையுரை நல்கித் தடுத்துள்ளனர் என்று அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும் நெடுங்கிள்ளி என்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்தவன்; சேர, பாண்டிய அரசரை வென்று, அவர் தம் வஞ்சியென்னும் ஊரையும் மதுரை யென்னும் ஊரையும் புலவர்க்கு வழங்

கத் தக்க ஆற்றலுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளியாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர், 'அழகிது' என நினைத்தார். நலங்கிள்ளியிடம் 'ஒன்றுபட்டால் வாழ்வுண்டு, இன்றேல், இருவர்க்கும் தாழ்வே என்று கூறினர். இக்கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. அதன் போக்கு, "அரசே! நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன், பாண்டியனும் அல்லன், சோழனே ஆவன். நீயும் சோழன், அவனுஞ் சோழன்; நீயும் ஆத்திமாலை சூடி யிருக்கிறாய்; அவனும் ஆத்திமாலை சூடி யிருக்கிறான். அஃது ஒன்றே நீங்கள் இருவீரும் ஒரு குடிப் பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவருள் எவர் தோற்றாலும், தோற்பதுநும் குடியன்றோ? அவ்வசை வரலாமா? நீங்கள் இருவீரும் வெற்றி கொள்ள முடியாது என்பது வெளிப்படை. உமது குடிக்கு வரும் பழியை நீக்கவேண்டுமானால் இம்மாறுபாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொருவீரானல், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று," என்பதாகும்.

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்' என்று கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப் படுத்திய புலவரது பெயரை நாம் அறியவேண்டாவோ? வேண்டினும் அவர் பெயரை அறியோம், ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள் வரை அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்போமாக! **கோவூர் கிழார்** வாழ்க!

மற்றொரு புலவர், பாண்டியன் ஒருவனுக்கும் சோழன் ஒருவனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனப்படுவர். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் அப்பாண்டியனையும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன் என்னும் அச்சோழனையும் ஒரு நாள் ஒருசேரக் கண்ட அப்புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார். "பால்நிறக் கடவுளும், நீலநிறக் கடவுளும் உடனிருப்பதுபோல் உள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணபிரானும்

ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீங்கள் இருவீரும் ஒருவீர் ஒருவீர்க்கு உதவி புரிவீராகுக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமை கொண்டு, நல்லன சொல்லுவார் போல் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவ தெல்லாம், இன்று போலவே என்றும் இருங்கள் என்பது. இருப்பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நுங்கள் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின், பிரியன்மின்.'' என்பது அவர் பாட்டின் கருத்து

மற்றுமோர் புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்று படுத்தி வைத்தார் என்றும் அறிகிறோம். அப்புலவர் பெயர் **எயிற்றியனார்** என்பது; ஊர் புல்லாற்றூர். கோப்பெருஞ் சோழன் என்னும் அரசன், உறையூரை ஆண்டுவரும் நாளில், ஒருநாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறுகொண்டனர். எதிர்த்து நின்ற அவரொடு பொரக் கருதி எழுந்தான் சோழ மன்னன். அப்பொழுது அங்கேயிருந்த பைந்தமிழ்ப் புலவர், "விறல் கெழுவேந்தே!" என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரையைப் புகலத் தொடங்கினார். அதன் சாரம், "பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே! இப்பொழுது உன்னோடு எதிர்த்து வந்து நிற்போர் உன் பகைவர் அல்லரே. நீயும் அவர்க்குப் பகைவன் அல்லை. பகைவரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ! புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க்குத் தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே!" என்பது ஆகும்.

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்று புலவருக்கு. "இன்னும் கேட்பாயாக, இசையில் விருப்ப முடையோய்! பெரிதும் கேட்பாயாக! புகழில் இச்சையுடையோய்!" என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றார். "புதல்வர் ஆலோசனை யின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். தோற்றுப்போனால் உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்? போரினை விரும்புகின்ற செல்வ! ஒருகால் நீ அவர்க்குத்

தோற்ருல், உன் பகைவரெல்லாம் உன்னை இகழ்ந்து மகிழ்வர். உலகில் பழியையே வைத்துச் செல்லவேண்டியிருக்கும். நான் உன் ஆற்றலில் ஐயமுள்ளேன் என்பதன்று. அவ் வாற்றலை இவரிடம் காட்ட வேண்டா என்பதே எனது வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னைவிட்டு இப்பொழுது நீங்கி யிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நல்வினைகள் பல செய்வாயாக. வாழிய அரசே!'' என்று நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரோடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக்குமோ? புலவர் உரைக்குங் காலே, வேம்பும் கரும்பும் போல இடையிடையே கடுஞ் சொல்லும் புகழ் மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அவர் அழைக்கும்போதே, அவன் பெருமையையும், வீரத்தையும் வெற்றி யையும் உரைத்து அழைத்தார்; இடையிடை அவன் ஆற்றலின் சிறப் பைக் குறிக்கும் சொற்களைக் கூறினர்; ''உனக்குத் தெரியாத தன்று'' என்று சொன்னர்; புகழ் விருப்பம் உள்ள அவன், பழி தரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினர்; புதல்வரை வெறுத்துரைப் பார் போன்று சில சொன்னர். இவை யெல்லாவற்றினும் மிக்கதாக, ''அமரில் விருப்பமுள்ள செல்வ'' என்றும், ''உன் வீரம் இப்பொழுது உன்னை விட்டு இருக்கட்டும்'' என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழாதிருக்க முடியாது. ஓர் அரசன் முன் நின்று, ''நீ உன் புதல்வர்க்குத் தோற்ருல்'' என்ற கூற்றைக் கூறு வது எளிதன்று. அரசன் வெகுளாதிருக்கும் பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்து விடாதிருக்கும் பொருட்டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டும் அன்றோ அத் தண்டமிழ்ப் புலவர்,

''அமர்வெஞ் செல்வ! நீ யவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே;
அதனல், ஒழிகதில் அத்தைநின் மறனே''

என இருமருங்கும் கட்டியைக் கூட்டி, இடையே கடுக்காய்த் தூளை வைத்தார்! இங்ஙன மெல்லாம் நன் மருந்து தரவல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர் தம் ஊர்பேர் உரைகளை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர்தம் பொன்னுரை களை யறிந்து வாழ்வம் ஒன்ருகவே!

I. பொருள் கூறுக :—

தறுவாய், பனித்தார், பீலி, இளிவரல், துஞ்சிய, நிருபன், வெகுண்டு.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

உடம்பு பூரித்து, உவகை எய்துவர், செவிசாய்த்து நின்ருன். நயம்பட உரைக்கப்பட்ட, வற்புறுத்தினர்.

III. **விடை எழுதுக :—**

1. ஒற்றுமையைப் பற்றிப் பாரதியார் யாது கூறினர் ?
2. முதியவர் பிள்ளைகளுக்கு ஒற்றுமையின் சிறப்பை எவ்வாறு எடுத்துக் காட்டினர் ?
3. பிசிராந்தையாருக்கு நரை தோன்ருமைக்குக் காரணம் யாது ?
4. போர் தொடுத்த சோழமன்னர் யார் ?
5. கோவூர் கிழார் எவ்வாறு போரைத் தடுத்தார் ?
6. சோழர்க்குரிய மாலை எது ?
7. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனர் கூறிய அறவுரை யாது ?
8. எயிற்றியனர் கோப்பெருஞ் சோழனிடம் வேண்டியது யாது ?
9. எயிற்றியனர் கோப்பெருஞ் சோழனுக்குக் கூறிய பொருளுரை யாது ?

# 4. அணு வெடிக் குண்டு

**திரு. அ. சி. சுப்பிரமணிய பிள்ளை, பி. ஏ., எல். டி.,**

வெடிக்குண்டுகளெல்லாவற்றிற்குமே பொதுவான சில அபாயங்கள் உண்டு. ஆனால் ஒளிச்சிதறல் என்ற அபாயம் இதற்கே சிறப்பானது. அணுகுண்டு வெடிக்கும் போது கடற் பரப்பில் ஏற்படுவதைவிட அதிகச் சேதம் நிலப் பரப்பிலேயே ஏற்படும். தீ, சூடு, காற்றுப் புயல், ஒளிச் சிதறல் இவைகளால் கடலில் இந்த அபாயம் சுமார் ஒரு மைல் வட்டத்திற் குள்ளாகவே யிருக்கும். நிலத்திலோ இது இரண்டு மைல் வட்டங் கொண்டதாக இருக்கும். இந்த எல்லைக்குள் காற்றுப் புயலால் வீடுகள் தூளாகும்; நாலு பக்கங்களிலும் துண்டுகள் வீசும். கடலில் இந்த அபாயங்கள் இல்லை. அணுகுண்டு வெடித்த ஒருமைல் தூரத்துக்குள் ஒளிச்சிதறல் அபாயம் நிறையப் பரவிக் கிடக்கும். ஒளிச்சிதறல் பகுதியில் உயிர்கள் வாழ முடியா. மக்கள் அந்தப் பகுதியை விட்டு உடனே வெளியேறி விடவேண்டும். இதன் வேகம் மாதக்கணக்கில் கூட இருக்கும். எனவே பலமாதங்கள் வரைக்கும் இந்த இடம் மக்கள் வாழ்க்கைக்கு உதவாமல் போய் விடும். குண்டு எவ்வளவுக் கெவ்வளவு தரையருகே வெடிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு இந்த அபாய எல்லையும் விரியும்.

போர் முடிந்த பின்பும் இந்த அணுகுண்டு வீச்சுப் பரிசோதனை ஒன்று நடத்தி அதன் பலா பலன்களை ஆராய அமெரிக்க அரசாங்கத்தினர் தீர்மானித்தனர். பசிபிக்குப் பெருங்கடலின் இடையிலிருந்த பிகினி என்ற தீவுக்கு அருகே ஓர் இடத்தை அவர்கள் இதற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். பல வகையான பொறிகளைக் கொண்ட கப்பல்களும், ஆகாய விமானங்களும், மனிதர்களும் இந்த எல்லைக்கு வெளியே காத்திருந்தார்கள். பொறிகள் வெப்பப் பெருக்கம், காற்றழுத்தம், ஒளிச்சிதறல் முதலிய பல நிகழ்ச்சிகளைக் குறித்துக் காட்டும் சக்தி வாய்ந்தவை. ஆனால் எதிர்பார்த்தபடி பெருமிதமாக ஒன்றும் நிகழவில்லை. எனவே மற்றுமொரு சோதனையும் நடத்தப்பட்டது. அதில் கடலுக்குள் போட்ட குண்டு ஒரு கப்பலை நெடுந்தூரம் தூக்கி அடித்தது. 2200 அடி சுற்றளவுள்ளதும், ஒருகோடி டன் எடையுள்ள தண்ணீரைக் கொண்டதுமான ஒரு பெரிய நீர்த்தூண் ஒரு மைல் உயரம் கிளம்பிற்று. இந்த உயரத்தை அடைந்த இந்த நீர்க்கம்பம் வெடித்து, அதன் விளைவாக ஆவியும் நீரும் கலந்த மேகப்படலம் ஒன்று மூன்று மைல் வட்டத்திற்குக் கவிந்தது. இது பிறகு சாதாரண மேகம்போலவே எங்கும் பரவிற்று; மழையும் பெய்தது. இதன் மழைத்துளி ஒவ்வொன்றும் ஒளிச்சிதறல் இயக்கம் பெற்றதாயிருந்தது. கட்டுக்கதையும் அச்சமுமே அணுச்சக்தியின் மிகப் பாராட்டத் தகுந்த பலன்களை மறைக்கின்றன.

இந்நாள் வரையிலும் அணுச்சக்தியைப் பற்றிப் பலர் எழுதியவைகளிலும், பேசியவைகளிலும் இருபெரும் பிழைகள் இருப்பதைக் காணலாம்.

முதலாவது பிழை யாதெனில், போரில் உயிர் இனத்தையே அழிக்கவல்ல அணுகுண்டைப் பற்றிய கவனமே பெரிதாக இருந்ததே யன்றி, மனித இனத்தின் நன்மைக்குச் சமாதான காலத்தில் அணுச்சக்தியை எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொள்ளலாமென்ற எண்ணமே சிறிதேனும் யாருக்குமே தோன்றியதாகத் தெரியவில்லை.

இரண்டாவது பிழை என்னவென்றால், எவராவது ஒருவர் போர்ச் செயல்களுக்குப் புறம்பாக அணுச்சக்தியைப் பயன்படுத்தும் வழிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினால், அவரைப் பகற்கனவு காண்பவரென்றும், அவர் புகலும் செய்திகளெல்லாம் உதவாக்கரையான கட்டுக் கதைகளெனவும், அவருடைய முயற்சிகளெல்லாம்

கி. பி. 2000 ஆண்டில் உலகத்து உயிர்களின் வாழ்க்கை நிலை எவ்வாறிருக்குமென முடிவு கட்டுவதற்கே உதவக்கூடியன என்றும் பலர் அவரை நகையாடி இகழ்ந்து வந்தார்கள்; மேலும் அவர்களுடைய கூற்றுக்களெல்லாம் பழையன வற்றையும் புதியன வற்றையும் கண்டபடி குழப்பிக்கூறும் புனைசுருட்டு என்றும் நையாண்டி செய்து வந்தார்கள்.

ஆனல் நமக்கு இன்றியமையாது தெரிய வேண்டியது அணுச்சக்தி வருங்காலத்தில் நம்மனோர்க்குச் செய்யக் கூடியது என்ன என்பதை அறிந்து கொள்வதே யாகும்.

இவ்வளவு முதன்மையான அணுவின் வரலாற்றை யாருமே சரியான முறையில் விளங்க வைக்காததற்குக் காரணங்களும் பலஉள. அவையாவன.

(1) அணுகுண்டைப் பற்றிய அச்சமே பலருடைய சிந்தனையைச் சிதறவடித்து மழுங்கவைத்து விட்டது.

(2) ஓர் அணுகுண்டின் விலையே கோடிக் கணக்கான டாலர்களாகின்றது என்ற எண்ணமே அணுச்சக்தியைப் பயன்படுத்தும் முயற்சி வீண் பணச் செலவில் கொண்டு விட்டுவிடும் என்று தயங்க வைத்தது.

(3) அணுச்சக்தியின் உதவியால் ஓர் அம்பைச் சந்திரனிடம் அனுப்ப ஒரு நிலக்கரித் துண்டும் ஒன்றிரண்டு தேயிலைத் துணுக்குகளுமே விறகாகப் பயன் படுத்தினல் போது மென்ற வாதம் ஒருவராலும் நம்பப்படவில்லை.

(4) ஒருவரிடமும் இந்த அருமையான அணுச்சத்தியைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய அறிவும் ஆற்றலும் தோன்றவில்லை.

(5) கடைசியாக, உண்மை ஒரு பெரிய போர் மறையாக வைக்கப்பட்டிருந்ததால் இதைப்பற்றிப் பெரிய விஞ்ஞானிகள் மட்டும் மிக எச்சரிக்கையுடன் தங்களுக்குள் பேசிவந்தார்கள். பொது மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அளவுக்கு இது பரவவில்லை. ஆனல் இந்த உண்மையை இம்மாதிரி, ஒளித்து வைத்திருந்ததற்காகப் போர் அதிகாரிகளையோ, சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளையோ நாம் குறைகூற முடியாது. ஏனெனில் இவ்வுண்மை வெளிப்பட்டால் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடுந்தண்டனையைக் குறிப்பிட்டு

அரசியலாளர் பயப்படுத்தினார்கள். எனவே, உலகத்தின் கதியையே மாற்றவல்ல இச் சக்தியைப் பற்றிய விவரங்களை அமெரிக்கர்கள் மிக மறைவாகக் காத்து வந்தனர்.

இவ்வளவு தடைகள் போடப்பட்டிருந்தும், அணுகுண்டைப் பற்றியவேகம் சற்றுத் தெளிந்ததும், அணுச்சக்தியின் மறை உண்மை கள் மெல்ல வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. ஒரு சிலர் இச்சக்தி கூடிய விரைவில் என்ன வெல்லாம் செய்யவல்லது என்பதைப் பற்றியும் உணர ஆரம்பித்து விட்டார்கள். இச்சக்தியை உள்ளபடி அறிந்த உடனே, அவர்கள் இது மனித சமூகத்திற்குப் பெருந்துன்பத்தை விளைப்பதை ஒழித்து அதற்குப் பதிலாக மிகுந்த நன்மையையும் விளை விக்கும் என்று அறிந்தனர். அவ்வளவு வியக்கும் படியான சக்தி அணுவுக்குள் அடங்கிக் கிடப்பதை அவர்கள் கண்டனர்.

இந்நிலைக்கு வந்தபிறகு இந்தச் சக்தியை ஒரு மூடுமந்திரமாக வைத்திருப்பது நேர்மையல்ல வென்று அவர்கள் நினைத்தார்கள். ஏனெனில் இப்பூவுலகத்தைப் பிற்போக்கான நிலையிலேயே வைத் திருப்பது தகாத காரியம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். அணு குண்டை எறிவதில் கண்டிப்பான தடையை விதிப்பதுதான் பொருத் தமான தாகும். இந்த நாசகாரியத்தைத் தடுத்த கணமே, இச்சத்தி நமது நாகரிகத்தை மேன்மேலும் வளர்க்கப் பயன்பெறும் விதங்களை ஆராய்வதே நமது கடமையாகும்.

இச்சக்தியை ஏராளமான செலவில்தான் தயாரிக்க முடியும் என்ற எண்ணமும் அவ்வளவு சரியான தன்று. ஏனெனில், ஓர் அணுகுண் டைத் தயாரிக்கப் பல கோடி டாலர்கள் செலவாகுமென்றால், அது பல காரணங்களைப் பொறுத்திருக்கின்றது. போர்க்கால விலை உயர்வு, கிட் டத்தட்ட ஐந்து ஆண்டுகள் உழைப்பின் செலவு ஆகிய இப்போர்ப் பட்ட உண்மைகளே அதன் அளவு கடந்த விலைக்குக் காரணங் களாகும். சராசரியாகக் கணக்கிட்டால் ஓர் அணுகுண்டைத் தயா ரிக்கச் சுமார் 500 மிலியன் டாலர்கள் போதுமென்பது தெரிகிறது. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இதன் செலவைச் சுமார் 350 மில்லியன் டாலர்களாகக் குறைத்துக் கொள்ளவும் முடியுமென்று நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆகவே நமது நினைவையே தடுமாற வைக்கும் அதன் விலை நிலைமையானது முதலீடு, ஆராய்ச்சி, மூலப் பொருள்கள், செய்முறை, ஓரிலக்கம் தொழிலாளிகளும் அவர்கள்

குடும்பங்களின் குடியிருப்புச் செலவும் சம்பளமும் ஆகிய பல இனங்களைப் பொறுத்ததாகும்.

இச்சக்தியை உண்டாக்க விலைஉயர்ந்த சாதனங்கள் தேவை. இதற்காக மிகப்பெரிய ஆறு இயந்திரங்கள் தேவையாக இருந்தன. யுரேனியத்தைப் பிரிக்கும் முறைக்கு நான்கு இயந்திரங்களும், அணுச் சக்தியைப் பெறுவதற்கு மூன்றும், இன்னும் சக்தியைப் பற்றித் தொடர்ந்து ஆராய்வதற்குப் பல ஆராய்ச்சி நிலையங்களும் அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் நிறுவப்பட்டன.

மற்றும், இச்சக்தியை உருவாக்குவதில் மூன்று புதிய நகரங்களே எழுப்பப்பட்டன. அந்த நகரங்களின் மக்கள் தொகையே நம்மை வியப்பில் ஆழ்த்தும். 78,000 மக்களைக் கொண்டது ஒரு நகரம்; மற்றொன்று 18,000 ஆட்களைக் கொண்டது; மூன்றாவது நகரத்தில் 6000 மக்கள் இருந்தார்கள். இவ்வளவு பெரிய நகரங்கள் தோன்றினது அணுச்சக்தியை உண்டாக்குவதற்காகவேதான் என்றால் இச்சக்தியின் மாயம் தான் என்ன!

இவ்வளவு செலவினங்களிலும் மிகப் பெரியது வாயுக்கள் பரவுவதற்கான இயந்திர சாதனமேயாகும். இதற்கு அடுத்தபடியாகப் பெரும் செலவில் அமைக்கப் பெற்றது ஒரு பெரிய இயந்திரசாலை ஆராய்ச்சி நிலைய மாகும்.

இவ்வாறிருப்பினும் இந்தச் செலவினங்களில் நாம் கவனிக்க வேண்டியதொரு மிக முதன்மையான செய்தி என்னவென்றால், அமைதிக் காலத்தில் அணுச்சக்தியை உண்டாக்குவதற்கு இவ்வளவு ஏராளமான பணச்செலவு ஆகாது என்பதே யாகும். என்னதான் செலவாகுமென்பதை இப்பொழுதே திட்டமாகச் சொல்வது முடியாது. ஏனெனில் அம்மாதிரியான முயற்சி ஒன்று எங்குமே இதுவரை ஆரம்பிக்கப்படவேயில்லை. ஆனால் இச்சமயம் அமெரிக்காவில் படைகளின் கண்காணிப்பில் நடைபெறும் சோதனைகளின் நோக்கம் யாதோவெனில் அமைதிக்காலத்தில் உதவக்கூடிய அணுச்சக்தியைத் தயாரிக்கும் சிறிய ஆக்க நிலையங்களை அமைப்பதே யாகும்.

இச்சமயம் மூன்று டாலர்களாக விற்கப்படும் ஓர் இராத்தல் யுரேனியத்திலிருந்து பெறும் சக்தியை அதே விலைக்குக் கிடைக்கும் ஒரு டன் நிலக்கரியிலிருந்து பெறலாமென்பது திட்டமான உண்மை. அதாவது ஏராளமான எடையுள்ள நிலக்கரியிலிருந்து பெறக்கூடிய

சக்தியை மிகச்சிறிய அளவு எடையுள்ள யுரேனியத்திலிருந்தே பெற லாமென்பது வெளிப்படை. ஆனால் இப்பொழுது விஞ்ஞானப் புல வர்களால் ஆக்க முடிந்தது மிகச்சிறு அளவு அணுச்சக்தியே யாகும். இப்போதைய நிலைமை இவ்வாறிருந்த போதிலும், ஆராய்ச்சியாளரு டைய நோக்கம் இச்சக்தியை ஏராளமாகப் பெறுவது எப்படி என்று காணும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருத்தலேயாகும்.

I. **பொருள் கூறு :—**

ஒளிச் சிதறல், பொறிகள்.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

வெப்பப் பெருக்கம், காற்றழுத்தம், எவ்வளவுக் கெவ்வளவு, உயிரினத் தையே அழிக்கவல்ல, பகற்கனவு, நையாண்டி செய்தல்.

III. **விடை எழுதுக :—**

1. வெடிக்குண்டு வெடிப்பதால் ஏற்படும் அபாயங்கள் எவை ?
2. பிகினி என்ற தீவுக் கருகே கடலுக்குள் போட்ட குண்டினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?
3. அணுச் சக்தியைப் பற்றிப் பேசியவரிடம் இருந்த இரு பெரும் பிழைகள் யாவை ?
4. அணுவின் வரலாற்றை எவரும் சரியான முறையில் விளங்க வைக்காத தற்குக் காரணங்கள் எவை ?
5. ஓர் அணுகுண்டைத் தயாரிக்க எவ்வளவு தொகை செலவாகும் ?
6. யுரேனியத்தின் மதிப்பினை எவ்வாறு அறிகிறோம் ?

# 5. சங்கப் புலவர் நக்கீரனார்

**வித்துவான். திரு. ம. வி. இராகவன்.**

முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும் கல்வியிற் சிறந்தோர் பாண்டிய மன்னர் ஆவர். பண்டியர் தம் தலை நகரமாகிய மதுரையம்பதி யில் மும்முறை தமிழ்ச் சங்கத்தை நிறுவி, செந்தமிழ் மொழியைச் சிறப்பாக வளர்த்து வந்தனர். அங்ஙனம் அவர்களால் கடை முறை யில் நிறுவப்பட்ட சங்கம் கடைச்சங்கம் எனப் பெயர் பெற்றது. அஃது இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விளங்கியது. அதன் கண் நல்லிசைப் புலவர் நாற்பத்தொன் பதின்மர் குழுமியிருந்து விழுமிய பாக்கள் பல பாடினர்; நூல்கள் பல

செய்தனர்; பயன்மிக்க பல நூல்களை அரங்கேற்றினர்; பல இலக்கண நூல்களை வகுத்தனர்; இன்றமிழ் நூல்கள் பலவற்றை நன்கனம் ஆராய்ந்தனர். இத்தகைய தமிழ்ப் பணிகளால் அச் சங்கம் தனிப் புகழ் பெற்றுத் தழைத்தோங்கியது.

அச் சங்கத்து வீற்றிருந்து தமிழாராய்ந்த தண்டமிழ்ப் புலவர் நாற்பத்தொன்பதின்மருள் தலைமையானவர் **நக்கீரர்** என்பவர். கீரன் என்பது அவரது இயற் பெயர். 'ந' என்பது சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல். இவர் அச்சங்கத்து இருந்த புலவர்கள் அனைவரினும் புலமையில் தலைமை பெற்றுச் சிறந்து விளங்கியதால் அக் காலத்திருந்த அறிஞர் அனைவரும் இவரை நக்கீரர் என அழைப்பாராயினர். இவர் மதுரை நகரில் தமிழாசிரியராக விருந்து **மதுரை கணக்காயனர்** எனப் பெயர் பெற்ற தமிழ்ப் பெரியாரின் தவப் புதல்வராவர். எனவே இவர் **மதுரை கணக்காயனர் மகனர் நக்கீரனர்** எனப் பெயர் வழங்கப்பட்டார். இவர் அந்தணர் மரபினர்; சிவபெருமானை வழிபடும் செந்நெறியினர்; கல்விச் செருக்கும் பெருமிதமும் அஞ்சாமையும் உடையவர். இவர் தம் புலமைப் பேரொளியால் தமிழ்ச் சங்கத்தைப் பொலிவுறுத்தி வந்தார்.

அக் காலத்தில் பாண்டிய மன்னனுக இருந்தவன் **வங்கிய சூடாமணி** பாண்டியன் என்பவன். அவன் சண்பகவனம் ஒன்று வைத்து, அதில் மலரும் மலர்களைக் கொய்து, அவற்றால் பலவித மாலைகளைத் தொடுத்து, சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்தி வந்தான். அதனுல் அவன் **சண்பக பாண்டியன்** எனப் பெயர் பெற்றான். அச் சண்பக பாண்டியன் ஒருநாள் மாலை தன் அரசமாதேவியோடு இளமரக்காவில் இன்புற்று உலாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது தென்றற் காற்று மெல்லென வீசியது. அதில் வியக்கத்தக்க நறுமணமொன்று கலந்து கமழ்வதை அரசன் உணர்ந்தான்; அப்புது மணம் தன் கோப்பெருந்தேவியின் கூந்தலிலிருந்து வருவதை அறிந்தான். 'இஃது இம்மண்ணுலகத்திற்குரிய மணம் அன்று; இத்தகைய நறுமணமுள்ள மலர் எதுவும் இவ்வுலகத்தில் இருப்பதாக நாம் அறிந்ததில்லையே! இது புது மணமாக அன்றோ உள்ளது!' என்று எண்ணி வியந்தான்; 'இவ்வாசம் இவள் கூந்தலுக்கு இயற்கையோ? அல்லது செயற்கையோ?' என்று ஐயுற்றான். அவன் அதன் உண்மையை அறிய விரும்பி, ஆயிரம் பொன் அடங்கிய கிழி ஒன்றைச் சங்க மண்டபத்தில் தூக்கி, 'என் ஐயத்தைப் போக்கக் கூடியதாக ஒரு பாடல்

பாடித் தருவார் இவ்வாயிரம் பொன் கொண்ட கிழியைப் பெறுவர்' என்று நாடெங்கும் பறையறைவித்தான். சங்கப் புலவர்கள் யாவரும் ஆராய்ந்தும் அதன் உண்மையை அறியமாட்டாது வருந்தினர்.

அந்நாளில் மதுரையில் சோமசுந்தரக் கடவுளுக்கு அருச்சனை புரியும்அருச்சகர்மரபினனுன தருமி என்னும் ஏழைப் பிரமசாரி ஒருவன் இருந்தான்.அவன் இச்செய்தியை அறிந்து, சோமசுந்தரக் கடவுள் திருமுன்அடைந்து, 'எம்பெருமானே! எளியேனுக்குத் தந்தையும் இல்லை தாயுமில்லை; அடியேன் விவாகத்தில் விருப்பமுற்றிருக்கிறேன்; அதற்குப் பொருள் சிறிதும் இல்லை; ஆகவே அரசன் ஐயத்தைப் போக்கும் பாடல் ஒன்றைத் தேவரீர் பாடித்தரின் அதனைக்காட்டி அரசனிடம் ஆயிரம் பொன் பெற்றுத் திருமணத்தை முடித்துக் கொள்வேன்' என்று வேண்டினன். சோமசுந்தரக் கடவுள் அவன் கள்ளமற்ற உள்ளத்தையும், அன்பின் மிகுதியையும் கண்டு, அவன் பால் திருவுள்ளம் இரங்கி, ஓர் ஓலை நறுக்கில்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ;
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே?"

என்னும் பாடலை எழுதித் தந்தருளினர். சிறந்த பெண்களின் கூந்தலுக்கு மணம் இயற்கையே என்பது இச்செய்யுளின் கருத்து.

தருமி பெருமகிழ்ச்சியோடு கோயிலினீங்கிப் பாண்டியனிடம் விரைந்து சென்று அச் செய்யுளை அரசன் கையில் நீட்டினன். அதனை வாங்கிப் படித்துப் பொருள் உணர்ந்த பாண்டியன், அதன் கருத்துத் தான் கொண்டிருந்த ஐயத்தைப் போக்குவதாக இருத்தலைக் கண்டு மகிழ்ந்து, 'இவன் சங்க மண்டபத்தில் தூக்கப்பட்டுள்ள பொற்கிழியைப் பெறக்கடவன்' என்று கூறினன். தருமி அரசன் ஏவலினல் சங்க மண்டபத்தை அடைந்து, அதன் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கலுற்றான். அப்பொழுது அங்குத் திடீரென்று தோன்றிய நக்கீரர், அவன் கொண்டுவந்த பாடலை வாங்கிப் படித்துப் பார்த்து, 'இச்செய்யுள் குற்றமுடையது. ஆகவே, நீ பொற்கிழி பெறுதற்கு உரியை அல்லை' என்று கூறி, அவன் கிழியை அறுப்பதைத் தடுத்தனர். புலவர்கள் அது கண்டு திகைத்து நின்றனர்,

தருமி, ''கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றே!' என்று ஏங்கினவனாய், சங்க மண்டபத்தினீங்கி, மெல்லச் சென்று, மீண்டும் சோமசுந்தரக்கடவுள் சந்நிதியை அடைந்து, அப்பாடலை அவர் திருமுன் வைத்து, தலை வணங்கி நின்று நிகழ்ந்தவற்றைக் கூறி முறையிட்டான்; ''இறைவனே! உம்மால் படைக்கப்பட்ட மனிதனாகிய நக்கீரனே உமது பாடலுக்குக் குற்றம் கூறினான் எனின் உமக்கு உள்ள பெருமைதான் யாது? எளியேனால் அன்றோ உமக்கு இவ் விகழ்ச்சி நேர்ந்தது!'' என்று இரங்கினான்.

அப்பொழுது சொக்கலிங்கப் பெருமான் **இறையனார்** என்னும் பெயரோடு ஒரு புலவர் வடிவங்கொண்டு சங்க மண்டபத்தை அடைந்தார். அங்குப் புலவர்களுள் பலரும் கூடித் தமிழ் ஆராய்ந்து கொண்டு இருந்தனர். நக்கீரர் தம் பெருமிதம் தோன்ற உயர்ந்த பீடத்தில் அமர்ந்து அப்புலவர் கூட்டத்திற்குத் தலைமை வகுத்திருந் தார். வந்த புலவர் அங்கிருந்த புலவர்களை நோக்கி, 'எமது கவிக் குக் குற்றம் கூறியவர் யாவர்?' என்று வினவ, அவ்வினா முடிவதற்கு முன்னரே அங்கு வீறுபெற வீற்றிருந்த நக்கீரர், 'நானே சொன்னேன்' என்றார்.

**இறையனார்:**—ஆயின் அப் பாடலில் நீர் கண்ட குற்றம் யாது?

**நக்கீரர் :**—அதில் சொற் குற்றம் ஏதும் இல்லை ; பொருட் குற் றம் உள்ளது.

**இறையனார் :**—அப்பொருட் குற்றம்தான் என்ன ?

**நக்கீரர் :**—பெண்களின் கூந்தலுக்கு மணம் பூவின் சம்பந்தத் தாலேயே உண்டாகிறது. ஆகவே, அதற்கு இயற்கையில் மணம் இல்லை. உமது பாடல் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்னும் கருத்துடையதாக இருக்கிறது. ஆகவே அது பொருட் குற்றம் உடையதே ஆகும்.

**இறையனார் :**—பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை என்பது உமது துணிபோ ?

**நக்கீரர் :**—ஆம்.

**இறையனார் :**—தெய்வப் பெண்கள் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையோ ?

**நக்கீரர் :**—இல்லை. அவர்கள் கூந்தலும் மந்தார நறுமலரின் சேர்க்கையாலேயே வாசம் பெறுவதால் அதுவும் செயற்கை மணம் உடையதே.

**இறையனார் :**—நீ வழிபடும் உமையாள் கூந்தலும் அத்தன்மை யதேயோ ?

**நக்கீரர் :**—ஆம். அஃதும் அத்தன்மையதே.

இறையனாராக வந்த சிவபெருமான் நக்கீரரின் கல்விச் செருக்கைக்கண்டு சினம் கொண்டார். அவர் தமது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்டினார். வந்துள்ளவர் நுதல்விழி நாட்டத்து இறைவன் என்பதை அறிந்த பின்னரும், நக்கீரர் சிறிதும் அஞ்சாராய், 'நீர் நெற்றிக் கண்ணைக் காட்டினும் உமது பாடல் குற்றமுடையதே. நீர் கண்ணைக் காட்டி என்னை வெருட்டக் கருத வேண்டா. நான் உமது கண்ணைக் கண்டு அஞ்சுவேன் அல்லேன்' என்று செருக்குடன் கூறினார். சிவபெருமான் அவர் செருக்கை அடக்க எண்ணி, தம் நெற்றிக் கண்ணை முற்றவும் திறந்து நக்கீரரை நேருற நோக்கினார். நக்கீரர் அவ்வெரிவிழி நோக்கின் வெம்மையைப் பொறுக்கலாற்றாது, அருகில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் விழுந்து அழுந்தினார். சிவபெருமான் புலவர்கள் காண மறைந்தருளினார்.

சங்கப் புலவர்கள் அச் செயலைக்கண்டு நடுக்கம் எய்தினர். நக்கீரர் இல்லாத சங்கம் மதியில்லாத வான்ம்போலப் பொலிவிழந்து இருப்பதைக் கண்ட சங்கப் புலவர்கள் ஒருங்குகூடிச் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியை அடைந்து, அவரை வணங்கித் துதித்து, நக்கீரர் செய்த பிழையைப் பொறுத்து, அவரை உய்வித்தருளுமாறு வேண்டினர். சோமசுந்தரக் கடவுள் புலவர்கள் வேண்டுகோட்கு இசைந்து, மீனாட்சி அம்மையாரோடு பொற்றாமரைவாவிக் கரையை அடைந்து, அதில் அழுந்திக் கிடந்த நக்கீரரை அருட்பார்வையால் நோக்கியருளினார். அத்திருவருள் நோக்கத்தால் நக்கீரர் வெம்மை நீங்கப் பெற்றுக் கரைசேர்ந்து, கண்ணுதற் கடவுளை வணங்கி, அவர்தம் திருவருள் திறத்தை வியந்து வாழ்த்தினார். புலவர்கள் நக்கீரரது உறுதியையும், சிவபெருமானது தண்ணளியையும் வியந்து மகிழ்ந்தனர்.

பின்பு நக்கீரர் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக வீற்றிருந்து மற்றப் புலவர்களுடன் நற்றமிழ் ஆராய்ந்து நலமுற வாழ்ந்தனர்.

நக்கீரர் சிறந்த பல தனிப்பாடல்களையும், நூல்களையும், உரைகளையும் இயற்றினர். சங்கநூல் தொகைகளுள் ஒன்றாகிய **எட்டுத்தொகையில்** அடங்கிய **அகநானூறு, புறநானூறு** முதலிய நூல்களுள் இவர் பாடியனவாகப் பல பாடல்கள் உள்ளன. பத்துப்பாட்டு என்னும் தொகைநூலுள் **திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை** என்னும் இரு பெரும் பாடல்கள் இவரால் இயற்றப்பட்டனவாகும். **இறையனார் அகப்பொருள்** என்னும் சீரிய செந்தமிழ் நூலுக்கு இவர் செய்ததாகக் கருதப்படும் **உரை** மிகச் சிறந்ததாகப் புலவர்களால் போற்றப்படுகிறது. **திருவீங்கோய் மலை எழுபது, கோபப் பிரசாதம், திருவெழு கூற்றிருக்கை** முதலிய பல பிரபந்தங்களும் இவரால் பாடப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. இவர் பாடல்கள் யாவும் சொற் சுவையும், பொருட் செறிவும், பெருமித நடையும் உடையனவாகஅமைந்து விளங்குவன. தமிழ்நாட்டு இளைஞர் அப் பழம்பாடல்களைப் படித்து இன்புறமுயல்வாராக.

**I. பொருள் கூறுக :—**

நல்லிசைப் புலவர், குழுமி, விழுமிய, இயற்பெயர், செந்நெறி, கா, வாசம், பொற்கிழி, திருமுன், தூங்கிய, வீறுபெற, தண்ணளி, உசாவி, புனல், பொருள் செறிவு.

**II. விடை தருக :—**

1. தமிழரசர்களுள் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தவர் யார் ?
2. கடைச் சங்கத்தில் தமிழ் வளர்ந்த வரலாறு யாது ?
3. நக்கீரர் யார் ? அவர் எத்தன்மையர் ?
4. சண்பக பாண்டியன் யார் ? அவன் கொண்ட ஐயம் என்ன ? அதனைத் தீர்த்துக்கொள்ள அவன் என்ன செய்தான் ?
5. தருமி என்பவன் யார் ? அவன் அரசன் ஐயத்தைப் போக்கக் கூடிய பாடலை எவ்வாறு பெற்றான் ?
6. தருமி பொற்கிழி பெறாது தடுத்தது யார் ? ஏன் தடுத்தார் ?
7. பொற்கிழி பெறாமல் திரும்பிய தருமியின் முறையீட்டைக் கேட்டு, சிவபெருமான் என்ன செய்தார் ?
8. சிவபெருமான் பாடலில் நக்கீரர் கூறிய குற்றம் என்ன ?
9. சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டியபோது நக்கீரர் என்ன கூறினார் ?
10. சிவபெருமான் நக்கீரரை எவ்வாறு தண்டித்தார் ?

11. நக்கீரர் மீண்டும் உய்ந்து வந்தது எப்படி ?

12. நக்கீரர் பாடிய பாடல்கள் எவ்வெந்நூல்களில் காணப்படுகின்றன ? அவர் இயற்றிய வேறு பிரபந்தங்கள் எவை ?

13. நக்கீரர் பாடல்கள் எத்தகையவை ?

14. இவ் வரலாற்றினின்றும் சிவபெருமானைப்பற்றி அறியப்படுவது என்ன ?

# 6. சிங்கப்பூர்

திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர்கள், B.A.

**சிங்கப்பூர் துறைமுகம்**

நான் ஆஸ்திரேலியப் பிரயாணத்தின் முடிவில், பிரமாண்டில் துறைமுகத்திலிருந்து 'எஸ். எஸ். சாரன்' என்ற கப்பலில் சிங்கப் பூருக்கு வந்தேன். '6 மாதங்களுக்குப் பின் மீண்டும் ஆசியாவுக்கு (அதன் முச்சந்தியான சிங்கப்பூருக்கு) வருகிறேன்' என்ற எண்ணமே என் மனத்தில் குடி கொண்டிருந்தது. வெள்ளை நாகரிகம் நிறைந்த மூன்று கண்டங்களில் பல மாதங்களைக் கழித்த எனக்கு, மலேயா அயல் நாடாகத் தோன்றவில்லை. 1949-ஆம் ஆண்டு ஜனவரித் திங் கள் 12-ஆம் நாள், அதாவது தைப் பொங்கலுக்கு இரு நாட்கள் முன்னதாக நான் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தேன். நான் வந்த கப் பல் துறைமுகத்தை அடைந்தபோது காலை 6 மணி இருக்கும். உரிய அதிகாரிகள் கப்பலுக்கு வந்து எனது பாஸ்போர்ட்டில் ''சாப்புக்'' குத்தினர். '' சாப்பு '' என்னும் மலேயா மொழிக்கு முத்திரை அல்லது 'ரப்பர் ஸ்டாம்பு' என்பது பொருள். நான் ஓர் ஐரோப்பிய இனத்தவரின் நாட்டிலிருந்து வந்ததால் என்னுடைய உடல் நிலையைப் பற்றிய உறுதி மொழிகளை ஒருவரும் சரிபார்க்கவில்லை. இந்தியாவில் மட்டுமே எல்லா நோய்களும் இருப்பதாக மலேயா அரசியலார் கருது வதே இந்த விதிவிலக்கிற்குக் காரணம் ஆகும்.

'சிங்கப்பூர் பெரிய கப்பல் தளம்' என்பது உலகத்தார் அனை வர்க்கும் தெரிந்ததே. அதைக் கட்டி முடிக்கப் பதினைந்து ஆண்டு கள் ஆயினவாம். அதற்குப் பிரிட்டிஷார் 20 மிலியன் பவுன், அதா வது 27 கோடி ரூபாய் செலவிட்டனராம். எனவே ஆசியாவில் சிங் கப்பூரே பெரிய துறைமுகமாக இருப்பது இயற்கையே. பல தீவு

களுக்கு இடையே அமைந்திருப்பதும் அதன் சிறப்பாகும். நாள் தோறும் ஒரு கோடி ரூபாய் பெறுமான பொருள் ஏற்றுமதியும் அதே அளவு இறக்குமதியும் சிங்கபபூர் துறைமுக வாயிலாக நடைபெறு கின்றன.

பிரிட்டனின் தென் கிழக்கு மூலையிலுள்ள சதாம்ப்டன் துறை முகத்தில் பிரயாணிகள் கப்பலில் ஏறுவதற்குச் செய்யப்பட்டுள்ளது போன்ற வசதிகளை நான் சிங்கப்பூர் துறைமுகத்தில் காணவில்லை. கப்பலை விட்டு இறங்கியதும் நியூயார்க்குத் துறைமுகத்திலுள்ளதைப் போன்ற சுங்கச் சோதனை அமைப்புக்களோ, தந்தி-டெலிபோன் நிலை யங்களின் பிரதிநிதிகளோ கண்ணெதிரில் இல்லை. பிரயாணிகள் கொண்டுவந்த பொருள்களைக் கப்பலிலிருந்து தாமே இறக்கிவிடும் கருவிகளும் சிங்கப்பூரில் இல்லை. எனக்குச் சிறப்பாகத் தெரிந்தது, சிங்கப்பூர் பொதுத் துறைமுகமாக (**பிரீ போர்ட்டாக**) இருந்ததால், சுங் கச் சடங்குகள் குறைவாயிருந்தது ஒன்று மட்டுமே. பொதுத் துறை முகங்கள் என்பன உலகில் சில இடங்களில் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஹாங்காங்கும் ஹாம்பர்கும் ஆகும். சிங்கப் பூர் துறைமுகம் இந்தோனேசியா, மலேயா, போர்னியோ முதலிய வளம் பொருந்திய பல நாடுகளுக்கு இன்றியமையாத துறைமுகமாக இருந்து வருகிறது. இந்த நாடுகளுக்கிடையே நடைபெறும் வியா பாரம் சிங்கப்பூர் வாயிலாகவே நிகழ்கிறது. அதுமட்டுமன்று. இந்த நாடுகளுக்கு மற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களும், இந்த நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குச் செல்லும் பொருள்களும் சிங் கப்பூர் வாயிலாகவே செல்லவேண்டும். இந்த நாடுகளில் சுங்கவரி விதிக்கப்படுவதால் சிங்கப்பூரிலும் சுங்கவரி விதிப்பது சரியன்று. எனவே சிகரெட், தங்கம், மது போன்ற ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படுகிறது. இதன் பயனாகச் சிங்கப்பூரில் பொருள்களெல்லாம் மலிவாகக் கிடைக்கின்றன. வெளி நாட்டு வாணிகமும் அந்நாட்டில் பெரிய அளவில் நடைபெறுகிறது.

### ஓட்டலுக்குப் புறப்பாடு

இனிச் சிங்கப்பூருக்குள் செல்லுவோம்: கப்பல் துறைமுகத்தை யடைந்து 10 நிமிடங்களில் நான் எனது ஓட்டலுக்குப் புறப்பட்டேன். 'ஸீவியூ' ஓட்டலில் தங்குவதற்கு நான் ஏற்பாடுகள் செய்திருந்தேன். இந்த ஓட்டல் மேயர் ரோடில் கடலுக்கு எதிரே அமைந்திருக்கிறது.

துறைமுகத்திற்கும் இதற்கும் உள்ள தொலைவு நான்கு மைல்கள். நான் ஓட்டலுக்குச் செல்லும் வழியில் சிங்கப்பூரின் முக்கிய சாலைகளைக் கடந்தேன். போருக்கு முன் சிங்கப்பூர்தான் ஆசியாவிலேயே துப்புரவான நகரமாக இருந்தது; ஆனால் இன்று அங்கு வழங்கும் பத்துக்காசு 20 காசு நோட்டுகளில்கூட அவற்றை நாம் கையால் தொடமுடியாத நிலையில் அழுக்கு நிறைந்திருக்கிறது. இத்தகைய துப்புரவின்மையும், வெப்பமும், விதவிதமான ஆடைகளும் வழிநெடுகக் காணப்பட்டன. ஆதலால், சிங்கப்பூருக்கும் சில இந்திய நகரங்களுக்கும் எனக்கு வேறுபாடு தெரியவில்லை. மக்கள் உரத்த குரலில் பேசுவதையும், கொள்வோரும் கொடுப்போரும் விலைகளில் ''பேரம்'' செய்வதையும் சில நாட்களில் நான் அறிந்தேன். இவை முதல்நாள் நான் எண்ணிய கருத்துக்களை உறுதி செய்தன.

**என் அலுவல்கள்**

ஓட்டலில் இறங்கியதும், மலேயாவில் என்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினேன். மலேயாவின் பல பகுதிகளைப் பார்க்கவும், அந்த நாட்டில் வேறுபட்ட வழக்கங்களைப் புரிந்துகொள்ளவும் நான் முயன்றேன். அங்கு எனக்கு, சிங்கப்பூர் செட்டியார் வணிக மன்றச் செயலாளர் திருவாளர் சே. சுப்பைய செட்டியாரவர்கள் பேருதவியாய் இருந்தார்கள். மலேயாவில் என்னை அன்புடன் உபசரித்த அன்பர்கள் மிகப்பலர். நாட்டுக்கோட்டை நகரத்தாரின் விருந்தோம்பலை அறிந்தவர்களுக்கு இதை விரித்துக் கூறவேண்டியதில்லை. அவர்கள் எனது வெளி நாட்டுப் பட்டறிவுகளை அறிவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்ததால், அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டங்களிலும் மற்ற வாய்ப்புக்களின் வாயிலாகவுமே நான் மலேயா நாட்டைப்பற்றி அறிய முடிந்தது. சிங்கப்பூரிலும் மலேயாவின் மற்ற நகரங்களிலும் பல சமூகத்தினரைச் சந்திக்க முடிந்தது. அப்போது இந்திய அரசியலின் பிரதிநிதியா யிருந்த திரு. திவி அவர்களையும் அவர் இல்லத்தில் கண்டு மலேயா பற்றிய செய்திகளை அவருடன் விரிவாக விவாதித்தேன்.

**சிங்கப்பூரும், மலேயாவும்—அரசியல் நிலை**

சிங்கப்பூர், மலேயா என்ற பெயர்கள் எதைக் குறிக்கின்றன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே இவற்றை விளக்கிக் கூறுவேன்.

ஜப்பான் போர் தொடுக்குமுன் மலேயாவில் 1. ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில் மெண்ட்ஸ், 2. பெடரேட்டட் ஸடேட்ஸ், 3. அன்பெட ரேட்டட் ஸ்டேட்ஸ் என்று மூன்று தனித்தனி அரசாங்கங்கள் இருந் தன. சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா என்ற மூன்று தீவுகளும் ஸ்ட் ரெயிட்ஸ் செட்டில் மெண்டில் அடங்கியன. மூன்ருவது பிரிவில் பல சிற்றரசுகள் இருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அர சாங்கம் இருந்து வந்தது.

போரில் வென்ற பின்னர், பிரிட்டிஷார் நிறுவிய அரசியல் சட்டப் படி இப்போது மலேயாவில் இரண்டு அரசாங்கங்கள் மட்டுமே உள் ளன; சிங்கப்பூர் தீவுக்கு மட்டும் ஓர் அரசாங்கமும் மலேயா மற் றெல்லாப் பகுதிகளுக்கும் ஒரு அரசாங்கமும் இருந்து வருகின் றன. அரசியல் மொழியில் முன்னதற்குக் காலனி என்றும், பின்னதற் குப் பெடரேஷன் என்றும் பெயர். முன்னதற்கு ஒரு கவர்னர் இருக் கிறர். பின்னதற்கு ஒரு மலேயா சுல்தானும் ஒரு பிரிட்டிஷ் ஹைகமி ஷனரும் நிர்வாகத் தலைவர்களாக இருக்கின்றனர். ஈரிடங்களிலும் அரசாங்கத்தார் நியமித்த ஆலோசனைக் குழுக்கள் மட்டுமே உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகள் இல்லை. இந்தப் பகுதிக்கும் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பிரிட்டிஷாரின் மற்ற நாடுகளுக்கும் எல்லா அதிகாரங்களும் படைத்தவர் கமிஷனர் ஜெனரல் மால்கம் மாக்டனல்டு என்பவர்.

**சிங்கப்பூரின் வரலாறு**

சிங்கப்பூர் என்பது ஒரு வடசொல். சிங்கநகரம் என்பது இதன் பொருள். 1819-இல் இது மீன் பிடிக்கும் சிற்றூராக இருந்தது. ஜோஹூர் சுல்தானிடமிருந்து ராபில்ஸ் என்ற வெள்ளையர் ஆண் டுக்கு 3000 வெள்ளி (5000 ரூபாய்) வாடகை கொடுப்பதென்ற உடன்பாட்டின் மூலம் சிங்கப்பூரைப் பிரிட்டிஷாரின் உடைமையாக்கி ஞர். இவர்தாம் சிங்கப்பூரை உண்டாக்கிய வீரர். அதன் முதல் கவர் னராக இருந்தவரும் இவரே. கடலிற் பிறந்து, கடற்படையில் பணி யாற்றிய ராபில்ஸ், உலகின் சிறந்த கடற்படைத் தளத்தை அமைத் தது இவரது வீரத்தை வெளிப்படுத்துகிறது. ராபில்ஸின் நினைவாகச் சிங்கப்பூரில் பல சின்னங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில வரு மாறு : ராபில்ஸ் பிளேஸ், ராபில்ஸ் மியூஸியம், ராபில்ஸ் பஜார், ராபில்ஸ் போஸ்டாபீஸ், ராபில்ஸ் ஓட்டல் முதலியன. ராபில்ஸின் சிலை

யும் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. இது செம்பால் செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் இச்சிலையைத் தமிழ் மக்கள் ''செம்புத் துவான்'' என்று சொல்லுகிறுர்கள். துவான் என்ருல் மலாய் மொழியில் துரை என்பது பொருள்.

**நகரச் சிறப்பு**

சிங்கப்பூரின் நீளம் 26 மைல்; அகலம் 14 மைல். தெற்குக் கோடியில் ஒரு மைல் நீளமுள்ள பாலம் ஒன்று இத் தீவை மலேயா நாட்டுடன் இணைக்கிறது. மணிலா, பாங்காக், ஹாங்காங், ஷாங்ஹை ஆகிய ஆசிய நகரங்கள் முறையே கீழ் நாட்டின் முத்து, ஆசியாவின் வெனிஸ், தென்கிழக்கு ஆசியாவின் ரிவரியா, தூரக் கிழக்கின் நடு நாயகமான இடம் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பெயர்கள் அனைத்துமே தென்கிழக்கு ஆசியாவின் தலைவாயிலான சிங்கப்பூருக்குப் பொருந்தும். அதன் கட்டடங்களும் கடைத் தெருக்களும் கண்டோரை மயக்கும் தன்மையுடையவை. பீச் ரோடிலுள்ள பேங்குகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் இவற்றின் கட்டடங்கள் மிகப் பெரியவை. இத்தகைய சிங்கப்பூர் ஓர் அழகான நகரந்தான், அதனுலேயே இதற்கு ஜப்பானியர் 'சோனுன் டோ' என்று பெயரிட்டனர். இப்பெயருக்கு ஜப்பான் மொழியில் அழகிய தெற்குத் தீவு என்பது பொருள். ஆனுல் பாரிஸ், ஸ்டாக்ஹோம், ஜினீவா ஆகிய நகரங்களை நான் முன்னரே பார்த்திருந்ததால், சிங்கப்பூரின் அழகு எனக்கு மிகுதியாகத் தெரியவில்லை. பலமாடிகளுள்ள கட்டடங்கள் சிங்கப்பூரிலிருந்த போதிலும், பம்பாயின் மெரைன் டிரைவைப்போல ஒரு வான வீதி அங்கே இல்லை. அங்கே என்னைக் கவர்ந்த கட்டடங்கள் சுப்ரீம் கோர்ட் கட்டடமும் கத்தே பில்டிங்குமே ஆகும்.

சுப்ரீம் கோர்ட் உள்ள மாளிகை அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள காபிடல் பில்டிங்கைப் பின்பற்றி அமைக்கப் பட்டது. நகராண்மைக் கழகக் கட்டடம் இதற்கடுத்தாற்போலிருக்கிறது. இவற்றுக்கு எதிரில்தான் இந்திய தேசீய இராணுவத்தினருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்ததாம். கத்தே பில்டிங் 14 மாடிகள் உடையது. இதுவே ஆசியாவில் மிக உயர்ந்த கட்டடம். இதில் சிங்கப்பூர் அரசியலாரின் அலுவலகங்ளும், ரேடியோ நிலையமும். மலேயாவின் ஸ்டுடியோக்களும், ஒரு தியேட்டரும், அழகிய அறைகளுடன் கூடிய ஒரு நல்ல ஓட்டலும் இருக்கின்றன. இக்கட்ட

டத்தின் ஒரு பகுதியில் மலையிருப்பதால், உச்சி வரையிலும் வாகனங்களை ஓட்டிச் செல்ல இயலுமென்று கேள்விப்பட்டேன். டில்லிக்குச் செங்கோட்டைபோல, சிங்கப்பூருக்குக் கத்தே பில்டிங் இருந்துவருகிறது. நேத்தாஜியின் சுதந்திர இந்தியத் தாற்காலிக அரசாங்கம் கத்தே பில்டிங்கில்தான் நிறுவப்பட்டது. மவுண்ட்பாட்டன் பிரபுவின் தலைமை இடமும் இக்கட்டடத்தில் தான் இருந்தது. அவரே ஜப்பானியரிடம் சரணாகதியைச் சிங்கப்பூரில் ஏற்றுக்கொண்டவரென்பதும், அமைதி குலைந்த நிலையில் ஜப்பானியர் விட்டுச் சென்ற மலேயாவை மீண்டும் அமைதிநிலைக்குக் கொண்டு வந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடுவது பொருந்தும். சிங்கப்பூரில் ஒரு சாலைக்கு அவருடைய பெயர் இடப்பட்டிருக்கிறது. கத்தே பில்டிங் லோகி வான் தோ என்ற சீனக் கோடீசுவரரைச் சேர்ந்தது.

மலேயாவில் மற்றொரு பெரிய செல்வர் அலிபூன்ஹா என்பவர். இவரும் ஒரு சீனரே. இவர் "டைகர் பாம்" என்ற தலைவலி மருந்தைச் செய்து விற்றுப் பெரும் பொருள் ஈட்டியவர். இதனால் இவருக்கு "டைகர் பாம் மன்னர்" என்ற பெயர் வழங்கிவருகிறது. இவர் ஹாங்காங்கிலும் மலேயாவிலும் பல பத்திரிகைகளை நடத்துகிறார். இவருடைய பத்திரிகைகள் பிரிட்டிஷ் அரசியலாரின் மலேயாக் கொள்கையை ஆதரிக்காததால் நாடு இல்லாத இந்த மன்னர், நாடு கடத்தப்பட்டிருக்கிறார்.

**மூன்று உலகங்கள்**

'சிங்கப்பூர்' என்றதும் என் நினைவுக்கு வருவனவற்றுள் அங்குள்ள மூன்று உலகங்களைக் குறிப்பிடுவேன். ஜாலன் பஜாரிலுள்ள நியூ வோர்ல்ட், கிம்செங் ரோட்டிலுள்ள கிரேட்வோர்ல்ட், கேலாங் ரோட்டிலுள்ள ஹாப்பி வோர்ல்ட் ஆகியவைகளே இம் மூன்றும். இவை ஒவ்வொன்றும் ஏராளமான மின்சார விளக்குகள் போடப்பட்ட திறந்த வெளிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே குழு நடனங்களும், திரைப்படங்களும், துப்பாக்கியால் சுட்டுப் பரிசுபெறும் போட்டிகளும், தத்தம் ஊழ்வினையைச் சோதிக்கும் பற்பல ஆட்டங்களும், கடைகளும், சிற்றுண்டிச் சாலைகளும், சீனரின் சினிமாத் தியேட்டர்களும் உண்டு.

குழு நடனங்களில் ஆடும் பெண்கள் சிங்கப்பூரில் 600 பேருளர். தொழிலுக்கேற்ற நல்ல தோற்றம் இருப்பதற்காக இவர்கள்

ஒவ்வொருவரும் மாதம் 155 வெள்ளி அதாவது 945 ரூபாய் செல விடுகின்றனர். உடை, செருப்பு, தலைமயிரை ஒழுங்கு படுத்தல், வாசனைப் பொருள்கள் வாங்குதல், போக்குவரவுச் செலவு இவற்றில் முறையே 40, 20, 25, 40, 30 வெள்ளிகள் இவர்களுக்குச் செல வாகுமாம்.

'ரோங்கிங்' என்ற மலாய் நடனத்தை இந்த உலகங்களிலேதான் நான் கண்டு களித்தேன். இஃது திறந்த வெளியில் ஒரு மேடைமீது நடைபெறுகிறது. இது ஒரு நுண்கலை. நடனம் ஆடுவோர் ஒரு காலை மட்டுமே ஊன்றிக்கொண்டு ஆடவேண்டும். பெண்ணுக்கு மிக அரு கில் ஆண் செல்ல வேண்டும். ஆனால் அவளைத் தொட்டுவிடக் கூடாது. அவனிடமிருந்து தப்புவதற்கே அவளும் முயலுவாள். இதைப் போன்ற நடனத்தை நான் வேறெங்கும் காணவில்லை.

**மற்றச் சிறப்புக்கள்**

சிங்கப்பூரின் மற்றொரு சிறப்பு, அது உலகத்தினர் அனைவருக் கும் பொதுவான ஒரு நகரமாக இருப்பதாகும். இந்தியர், சீனர், மலாய்க்காரர்கள், டச்சுக்காரர், பிரிட்டிஷார், பிலிப்பைன்ஸ்காரர், அரேபியர் ஆகிய எல்லா இனத்தினரும் வாழும் பெருமை சிங்கப் பூரைச் சேரும். சிங்ப்பூரின் மொத்த ஜனத்தொகை 10 லட்சம். ஏழு லட்சம் பேருக்கு மேற்பட்ட சீனரும் ஒரு லட்சத்துக்குட்பட்ட இந்தியரும் இந்நகரில் இருக்கின்றனர்.

சிங்கப்பூரின் நடு நாயகமான இடமாக விளங்குவது ராபில்ஸ் பிளேஸ் ஆகும். இந்த மைதானத்தைச் சுற்றிலும் புகழ்பெற்ற கடைகள் இருக்கின்றன. 'பி. பீ. டிசெல்வா' என்ற நகைக்கடை யினர், இளவரசி எலிசபெத் திருமணத்துக்குத் தாம் நகை அனுப்பி யதை விளம்பரப்படுத்துகின்றனர். 'வாசிமல்ஸ்' என்ற சில்க் வியா பாரிகள் தம் கடையில் 'ஜீன் சிம்மன்ஸ்' என்ற உலகப் புகழ்பெற்ற திரை நட்சத்திரம் பொருள் வாங்கியதை விளம்பரப்படுத்துகின்றனர். இங்குள்ள துணிக்கடைகள் அனைத்தும் சிந்திக்காரர்களைச் சேர்ந் தவை. அருகிலுள்ள (சிங்கப்பூரின் வால் ஸ்ட்ரீட்டாகிய) மார்க்கெட் தெருவிலுள்ள வட்டிக் கடைகள் நாட்டுக்கோட்டைச் செட்டியார் களையும் வங்குசாக்கள் நாடார்க்களையும் சேர்ந்தவை. ராபில்ஸ் பிளேசிலுள்ள கட்டடங்களை எல்லாம் 'கியான்சிங்' என்ற இந்திய ...கர் போர்க் காலத்தில் விலைக்கு வாங்கிவிட்டார். எனவே

இன்னும் சில மாதங்களில் ராபில்ஸ் பிளேசின் பெயர் 'கியான்சிங் பிளேஸ்' என்று சிங்கப்பூர் நகராண்மைக் கழகத்தாரால் மாற்றப்பட்டால், நான் வியப்படையமாட்டேன்.

## கதம்பம்

### சிங்கப்பூரில் இருப்பவை

விமான நிலையங்கள், பல்லாயிரம் திரிஷாக்கள் (சைக்கிளின் துணைகொண்டு மனிதன் இயக்கும் ஒரு வகை ரிக்‌ஷாக்களுக்குத் திரிஷா என்பது பெயர்), பலநாட்டு நாணயங்களைக் குறைந்த விலைக்கு மாற்றுவதைத் தொழிலாக உடையோர், சீர்கெட்ட கப்பலைச் செப்பனிடுவோர், துபாஷ்கள் (இது துவிபாஷி என்பதன் திரிபு; இருமொழி பேசுதலில் வல்லுநர் எனப் பொருள்படும்), பல ஆயிரம் காடிகள் (மோட்டார்கள்), ஓர் ஆயிரம் யூதர், எப்போதும் ஒரே விதமான தட்பவெப்ப நிலை.

### சிங்கப் பூரில் இல்லாதவை

எண்ணெய்க் கிணறுகள், கலைச்சிறப்பு, காக்கை.

### சிங்கப்பூரிலும் மலேயாவிலும் சிறப்பான ஆட்டம்

பாட்மின்டன்.

### தொழிற்சாலைகள்

ரப்பரால் ஓடு, மிதி போன்ற பலவிதப் பொருள்கள் செய்வது, மூலப்பொருளாகக் கிடைத்த ஈயத்தை ஏற்றுமதிக்குத் தக்கபடி பக்குவப்படுத்துவது, தேங்காய் எண்ணெய் செய்வது, சோப் உற்பத்தி செய்வது ஆகிய தொழில்கள் சிங்கப்பூரில் சிறப்பாக நடைபெறுகின்றன. ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி போன்ற அமெரிக்கக் குழுக்கள் சிங்கப்பூரில் உள்ளன. இவைகளுக்கு உதவியாயில்லாத எந்த அரசியலாரும் இன்றைய மலேயாவில் பல நாட்கள் நீடித்திருக்க இயலாது.

### சீனர்

சிங்கப்பூரில் பெரும்பான்மையான சமூகத்தினர் சீனரே. ஆகையால் அவர்களைப் பற்றிய ஒரு குறிப்புடன் இக் கட்டுரையை முடிப்போம்.

உலகில் சீனர் இல்லாத இடமே இல்லை. மலேயா, சைன கருகில் உள்ள நாடு. இரு நாடுகளுக்குமிடையே சப்பல்

வரத்து மிகுதியாக இருக்கிறது. விமானத்தில் சீனுவிலிருந்து புறப்பட்டால் 10 மணி நேரத்திற்குள் மலேயாவை அடைந்து விடலாம். தவிரவும் மலேயா போதிய ஜனத்தொகை இல்லாத நாடு; வளம் மிகுந்தது. அருகிலுள்ள ஏழ்மை நாடுகளில் வாழும் மக்களைத் தன்னகத்தே இழுக்கும் சக்தி அதனிடம் உண்டு. இக்காரணங்களால் சீனர் மலேயாவில் இருப்பது இயற்கையே.

மலேயா வாழ்சீனருள் பல சாரார் உள்ளனர். அவர்களை இரு பொதுப் பிரிவினராகப் பாகுபாடு செய்யலாம். ஒரு பிரிவினர், கடந்த சில ஆண்டுகளில் சீனுவிலிருந்து வந்தவர்கள்; மற்றொரு பிரிவினர் மலேயாவில் பிறந்து வளர்ந்த சீனர். இவர்கள் சீனுவைப் பார்த்ததில்லை. சீனமொழியையும் அறியார். மலாக்காவில் வாழும் சீனர் 'பாவா சீனர்' என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஏனைய சீனரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில்லை. சீனமொழி, கலை, வரலாறு, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பரப்பும் நோக்கத்தோடு சிங்கப்பூரில் ஓர் இயக்கம் அண்மையில் தோன்றியுள்ளது.

சிங்கப்பூரில் ஒரு திரிஷாவிலோ, டாக்ஸி காரிலோ சென்று கொண்டிருக்கும்போது, மிகுதியான ஜனநெருக்கமும் கூடுதலான துப்புரவின்மையும் குறுகிய தெருக்களும் ஓரிடத்திலேயே கண்டால், அதுதான் சைனு டவுன் என்று முடிவு செய்துவிடலாம். இங்கே பலவிதமான உணவுச் சாலைகள் உண்டு. இவற்றில் உணவருந்த வேண்டுமென என்னுடன் வந்த சிலர் கப்பலிலேயே மனக் கோட்டை கட்டினர். சீனர் சிற்றுண்டிச் சாலைகள் நடத்துவதில் திறமையுடன் விளங்குகின்றனர். மலேயா நாட்டின் பெருஞ் செல்வர் சிலர் சீனரே என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். மற்றச் சீனரும் பிற இனத்தவரை விட நல்ல பொருளாதார நிலையில் இருக்கின்றனர். வியாபாரிகளாகவும், பல் வைத்தியர்களாகவும், அரசியலாரின் ஊழியர்களாகவும், தொழிலாளராகவும், வழக்கறிஞராகவும் சீனர் பல்லாயிரவர் வாழ்க்கை நடத்துகின்றனர். திரிஷா இயக்குவதும் சீனருக்கே உரிய தொழில்போல் தென்பட்டது. மலேயா நாடு முழுவதும் கித்தாக்கடைகளைச் சீனரே நடத்துகின்றனர். கித்தாக்கடை என்பது ரப்பரை வாங்கி விற்கும் தரகு மண்டி போன்றது. மலேயாவின் வாணிகத்தில் சீனரின் பங்கு என்ன என்பதை, அவர்கள் பயன்படுத்தும் நிறுத்தலளவை மட்டுமே மலேயாவில் வழங்கி வருவதிலிருந்து அறியலாம். விலை வாசிகள் பீக்கல் கணக்

கில் தான் சொல்லப்படுகின்றன. 100 கட்டி கொண்டது ஒரு பீக்கல், அதாவது 133/13 பவுண்டுக்குச் சமம்.

சீனரின் முக்கியப் பிரச்சினை எப்படித் தம் குழந்தைகளுக்கு உணவளிப்பது என்பதே. ஒரு டஜன் குழந்தைகளிருப்பது அவர்கள் குடும்பங்களில் பொதுவான பண்பு. குழந்தைகளைப் பெற்றோர்கள் எண் வரிசைப்படி அழைப்பதும் அவர்கள் மரபு.

சீனரின் புத்தாண்டு விழாவன்று நான் சிங்கப்பூரில் இருந்தேன். அன்று அவர்கள் தம் உறவினரையும் நண்பர்களையும் காணச் சென்றனர்; பழைய கணக்குகளைத் தீர்த்தனர்; சிவப்புப் பூக்களை வாங்கினர். பெண்கள் தலையலங்காரக் கடைகளுக்குச் சென்று தம்மீது பல பூச்சுக்களைத் தடவிக்கொண்டனர்; பல நாட்களுக்கு முன்பே பல் இழந்தவர்கள் அன்றுதான் தங்கப்பல் கட்டிக்கொண்டனர்.

I. **பொருள் கூறுக :—**

பாஸ்போர்ட், வங்குசா.

II. **விடை எழுதுக :—**

1. ஆசிரியர் உடல் நிலையை அதிகாரிகள் ஏன் சோதிக்கவில்லை ?
2. இந்தியாவைக் குறித்து மலேயா அரசியலார் கருதுவது யாது ?
3. சிங்கப்பூர் துறைமுகம் சிறப்புடையது என்று கூறக் காரணம் யாது ?
4. சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படும் பொருள்கள் எவை ?
5. போருக்குப்பின் சிங்கப்பூர் எத்தகைய நிலையில் இருக்கின்றது ?
6. ஆசிரியர் மலேயா நாட்டைப்பற்றி அறியத் துணை செய்தவை எவை ?
7. ராபில்ஸன் நினைவுச் சின்னங்கள் சிங்கப்பூரில் இருக்கக் காரணங்கள் எவை ?
8. செம்புத்துவான் எனப்படுவது எது ?
9. ஜப்பானியர் சிங்கப்பூருக்கு வைத்த பெயர் யாது ?
10. ஆசிரியர் சிங்கப்பூரில் கண்ட சிறந்த இரண்டு கட்டடங்கள் எவை ?
11. ஆசிரியர் சிங்கப்பூரில் கண்ட மூவுலகங்கள் எவை ?
12. ரோங்கிங்-என்பது யாது ? அதைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
13. சிங்கப்பூரில் இருப்பவை எவை ? இல்லாதவை எவை ?
14. 'பாவா சீனர்' – யாவர் ?
15. சீனரின் முக்கியப் பிரச்சினை யாது ?
16. சீனர் புத்தாண்டு விழாவை எவ்வாறு கொண்டாடுகின்றனர் ?